
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 23 (24.06.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 264




மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் முதன்முதலாக பெண்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். முதலாவது பெண்கள் அணி, நேற்று உத்தியோகபூர்வமாக பயிற்சி முடித்து வெளியேறியது. (படம்:ஜெகதீபன்)

## 'பொங்கு தமிழ்' சுமுகமாக நடைபெற ஒத்துழைப்புத் தருவது எமது கடமை!

### கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு சுமுகமான முறையில் நடைபெறுவதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஒத்துழைப்பினை, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் - அதன் யாழ். மாவட்டத் தலைவர் கரீனா எரிக்சனை, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது - 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு சகல பகுதிகளிலும் இருந்து வரவுள்ள மக்களுக்கு இராணுவத்தினரோ, பொலிஸாரோ எந்தவிதமான கெடுபிடிகளையோ, தடைகளையோ, அடக்குமுறைகளையோ



கண்காணிப்புக்குழு - மனிதநேயப் பிரதிநிதிகள் சந்திப்பு

மேற்கொள்ளக்கூடாது என்றும்,

நாம், எமது மக்களை ஒன்றிணைத்து மக்கள் எழுச்சி நிகழ்வாக இந்நிகழ்வை நடாத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மீண்டும் பேசுமாறு அரசுக்கு பிரிட்டன் வலியுறுத்து!

## இடைக்கால நிர்வாக சட்டச்சிக்கலுக்கு ஆலோசனை வழங்கவும் தயாராம்!

(லண்டன்)

**விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை லண்டனில் சந்தித்த - பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் வலியுறுத்தியுள்ளார். புலிகள் மீண்டும் பேச்சுக்கு வருவார்கள் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்ட அவர் - இடைக்கால நிர்வாகம் அமைக்கும் விடயத்தில் சட்டரீதியான ஆலோசனைகளை வழங்க பிரிட்டன் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.**

பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று மாலை இந்தச் சந்திப்பு நடந்தது.

அங்கு நடந்த சந்திப்பில் பேசிய ரொனி பிளேயர்,

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கு, குறிப்பாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கு பிரித்தானியா இலங்கை அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சர்கள் ரிரோன் பெர்ணான்டோ, பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பலை அழிக்க நானே உத்தரவு வழங்கினேன்!

### ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் கப்பலைத் தாக்கியழிக்க - தானே உத்தரவிட்டதாகவும், நாட்டையும், மக்களையும் பாதுகாக்கவே அந்த உத்தரவைத் தான் விடுத்ததாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நிட்டம்புவவில் - நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14 ஆவது சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழ், புலிகள் ஆயுதங்களைக் கடத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் புலனாய்வு அதிகாரி தெஹிவளையில் சுடப்பட்டார்!

### உளவில் உதவியவரே சுட்டுக் கொன்றாராம்

பொலிஸ் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.



கொழும்பு தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சுனில் தம்புறுவகே என்ற இவர், தனது இரவுக்கடமையை முடித்துவிட்டு, காலையளவில் பொலிஸ் விடுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயம் சுட்டுக் கொலலப்பட்டார்.

பொலிஸ் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்ட மதன்குமார் என்ற இளைஞனே இந்த அதிகாரியைச் சுட்டுக் கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் மதன்குமார் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடைசெய்வதற்கு கனேடிய அமைச்சர் மறுப்பு!

(ஒட்டாவா)

கனடாவில் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை இணைப்பதற்கு கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹாம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

1985 இல் எயர் இந்தியா விமானத்தைக் குண்டுவைத்து தகர்த்த இந்திய இயக்கமான பாபர் கல்சா உட்பட ஐந்து குழுக்களைத் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் சேர்க்க வேண்டுமென கனடா (10 ஆம் பக்கம் பார்க்க)

## 7 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர்.

மேற்படி நடவடிக்கைகளின்போது ஏழு தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பொலிஸ் விடுதி (10 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மங்கள விளக்கேற்றி 'வன்னி ரெக்' தொழில்நுட்ப நிறுவனத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

## உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியை உறவுகளோடு 'வன்னி ரெக்' பகிரும்!

### திறப்புவிழா வாழ்த்துச் செய்தியில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

எமது சமூகத்தின் கல்வியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வைச் சீரழித்து, எம்மை இனரீதியாக அழித்தொழிப்பதிலேயே எதிரி குறியாக இருந்துவருகிறான். இன்று போர் ஓய்ந்திருக்கிறது. ஒருவிதமான அமைதிச் சூழல் தோன்றியிருக்கிறது. ஆயினும், இன்றுள்ள சிங்கள அரசாங்கம் எமது இனத்திற்குக் கல்வியை மீளமைத்துக்கொடுக்க முன்வரவில்லை. அழிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மீளவும் திருத்தி அமைக்கப்படவில்லை. இன்றும் பாடசாலைகள் ஆக்கிரமிப்பு இராணுவம் குடியிருக்கும் கூடாரங்களாகவே உள்ளன. எமது இளம்சந்ததி கல்வி கற்பதற்கான வசதிகளின்றி தரையில் அமர்ந்தே கல்வி கற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள 'வன்னி ரெக்' உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் நேற்றைய திறப்புவிழாவையொட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (10 ஆம் பக்கம் பார்க்க)

# சண்டிலிப்பாய் கோட்ட தமிழ்த்தினப் போட்டி வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(உடுவில்)

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு -

**பிரிவு - 1**

**வாசிப்பு**

க.பிரசாந்தன் (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்), த.சுஜித்தா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணி வித்தியாலயம்), த.துஜீபா (மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

ஜெ.வானதி (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்), அ.லக்ஷிகா (சில்லாலை றோ.க. பாடசாலை), ஸ்ரீ.வேதசொரூபி (மானிப்பாய் விவேகாணந்த வித்தியாலயம்).

**எழுத்து ஆக்கம்**

ஸ்ரீ.கவிப்பிரியன் (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்), பா.சாஜினி (மானிப்பாய் மெமோறியல் பாடசாலை), ஜோ.தர்ஷிக்கா (இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்).

**பேச்சு**

ப.வானதி (நவாலி சென். பீற்றேர்ஸ் றோ.க.த.க.), ஜெ.நிரோஜினி (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்) ய.டெல்சி (இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்).

**பாவோதல்**

ர.மயூரி (மானிப்பாய் விவேகாணந்த வித்தியாலயம்), மு.தனுஜா (மானிப்பாய் மெமோறியல்), த.அனுஷா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

**இசையும் அசைவும்**

க.அஜித்தா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமனிய வித்தியாலயம்), கா.கஜலக்ஷி (நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்) சி.அனுஷியா (நவாலி மகாவித்தியாலயம்).

**குழு இசை**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க., பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி).

**நடனம் (தனி)**

மா.சுரேஜி (மானிப்பாய் சென். ஆன்ஸ்), க.மாருதி (இளவாலை கன்னியர்மடம்), செ.தர்மிகா (மானிப்பாய் சோதிவேம்படி).

**பிரிவு - 2**

**வாசிப்பு**

வி.சர்மிலா (இளவாலை கன்னியர் மடம்), இ.பிரமிளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ட.டாமினி (நவாலி மகாவித்தியாலயம்)

**கட்டுரை, கடிதம் எழுதல்**

ம.ரொஷின் மெலானி (இளவாலை கன்னியர்மடம்), தநிலோஷினி (மானிப்பாய் மகளிர்), து.நவிலன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி).

**பேச்சு**

வி.கயல்விழி (இளவாலை கன்னியர்மடம்), ம.அனஸ்ரின் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பெ.அன்ரனி ராஜ் (இளவாலை புனித ஹென்றியரசர்)

**பாவோதல்**

சே.கோபிகா (மானிப்பாய் மெமோறியல்), யோ.கௌதமி (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), ஜெ.யோகவேணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**இசை (தனி)**

ச.சங்கீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ப.கீர்த்தனன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ச.ரேணுகா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**இசை (குழு)**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, பண்டத்தரிப்பு இந்து கல்லூரி.

**நடனம் (தனி)**

ம.மதுராஜினி (மானிப்பாய் மகளிர்) உ.ஜனனி (ஆனைக்கோட்டை றோ.க.த.க.), யோ.கீர்த்திகா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

**பிரிவு - 3**

**கட்டுரை, கடிதம் வரைதல்**

மு.சிந்துஜா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலம்) அ.மயூரின் சயீனா (இளவாலை கன்னியர் மடம்), ஜெ.வேதிகா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க.).

**பேச்சு**

ஜெ.யூட் பிரதீபன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), ந.சாகினி (இளவாலை கன்னியர் மடம்), த.கிரிஷாலினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**பாவோதல்**

யோ.அன்பரசி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), த.பிரவீணா (மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.), வி. சுஜந்தினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

**இசை (தனி)**

பொ.அனற்றினா (சென் ஆன்ஸ் றோ.க.த.க.), செ.மெலோனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ம.தாரகா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை)

**நடனம் (தனி)**

க.கரோலின் பிரில்டா (இளவாலை கன்னியர் மடம்), க.தர்மிகா (மானிப்பாய் சென் ஆன்ஸ்), ரா.தர்சினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**பிரிவு - 4**

**கட்டுரை, சுருக்கம், கவிதை**

இ.குகன் (இளவாலை புனித ஹென்றியரசர்), அ.ஜெனார்த் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), செ.விஜிதா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்).

**கவிதை ஆக்கம்**

செ.ஜீவிதா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை) தி.ஆன் சர்மிளா (மானிப்பாய் சென் ஆன்ஸ்) ஸ்ரீ.சிந்துஜா (மாதகல் சென்யோசெப் ம.வி.)

**சிறுகதை ஆக்கம்**

வே.சிவலதாஜினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்பாடசாலை), அ.கோகுலரமணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), அ.உஷா (இளவாலை கன்னியர்மடம்)

**பேச்சு**

செ.ஹெவின்லி (இளவாலை கன்னியர்மடம்), ஜெ. ரஜவன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), உ.மிதிலா (நவாலி மகாவித்தியாலயம்)

**பாவோதல்**

பி.உதயதர்சினி (மாதகல் சென் யோசெப் ம.வி.), நா.கஜித்தா (மானிப்பாய் சென் ஆன்ஸ்), கு.குகானந்த் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**இசை (தனி)**

ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல்), கி.வாசுகி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), அ.நிருஜா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**நடனம் (தனி)**

லோ.செல்வலோஜினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வ.பிரசாந்தினி (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) சி.நிஷாந்தினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு - 5**

**கட்டுரை, திறனாய்வு**
**இலக்கியச் சொற்பொழிவு,**
**இலக்கண வினாவிடை**

ந.தயாளினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), நா.சிவதர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செ.லாவண்யா (மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

**கவிதை ஆக்கம்**

பூ.சுதர்சன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஸ்.அனஸ்ரமிலா (இளவாலை கன்னியர்மடம்), மா.கிருஷ்ணலீலா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**சிறுகதை ஆக்கம்**

த.தர்ஷிகா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), சு.திருக்குமரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), கு.சஜீவா (இளவாலை கன்னியர்மடம்).

**பிரிவு 5**

**பேச்சு**

எ.கிரேஷியன் (இளவாலை புனித ஹென்றியரசர்), யே.எட்வின் ஜெயராஜ் (மானிப்பாய் மெமோறியல்), ச.கமல்ராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**பாவோதல்**

ந.தவரஞ்சினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), அ.கிமாலினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.விஜிதா (மானிப்பாய் மெமோறியல்).

**இசை (தனி)**

த.நிஷா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செ.ஜெயகௌரி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), கோ.கோகுலப்பிரியா (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி).

**நடனம் (தனி)**

த.லோரஜி (இளவாலை கன்னியர்மடம்), ஜெ.ஜீவிதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி). யோ.பாமினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**நடனம் (குழு)**

சென். ஆன்ஸ் றோ.க.த.க., பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற திறந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு -

**குறு நாடக ஆக்கம்**

வே.கஜேந்திரன் (மானிப்பாய் மெமோறியல்), இ.சுதாகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), அ.ஜெயந்தினி (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**நாட்டிய நாடகம்**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

**நாடகம்**

இளவாலை கன்னியர்மடம், சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு**

மானிப்பாய் மகளிர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

**விவாதம்**

இளவாலை புனித ஹென்றியரசர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**தமிழறிவு வினாவிடைப் போட்டி**

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, இளவாலை புனித ஹென்றியரசர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**சிந்துநடை நாட்டுக் கூத்து**

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

**தென்மோடி நாட்டுக் கூத்து**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மட்டும்.

**வயலின்**

ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

**வீணை**

கி.விக்னேஸ்வரி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசலை)

**முஸ்லிம் நிகழ்ச்சி**

மு.நியாஸ் (சில்லாலை றே.க.த.க.பாடசாலை) (101)

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஊழியர் நலன்புரிச்சங்க நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம், டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில், அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் - மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைவராகவும், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சின்னத்தம்பி உபதலைவராகவும், கே.யோகநாதன் செயலாளராகவும், பி.கருணாகரன் பொருளாளராகவும் தெரிவாகினர்.

கணக்காய்வாளர்களாக எம்.அருளானந்தம், கே.செல்வராசா ஆகியோருடன் 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (17)

### ஞானச்சுடர் வெளியீட்டுவிழா

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினால், மாதாந்த வெளியிடப்படும் “ஞானச்சுடர்” வெளியீட்டு விழா, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வெளியீட்டுரையை சி. கிருஷ்ணபிள்ளை நிகழ்த்துவார். மதிப்புரையை சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் வழங்குவார். (17)

### புனரமைக்க நடவடிக்கை

வடமராட்சி கிழக்கிலுள்ள இயங்கிய விளையாட்டுக் கழகங்களை புனரமைப்புச்செய்து இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நடவடிக்கையில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள எல்லா விளையாட்டு கழகங்கள், சனசமூக நிலையங்களை இயங்கவைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(17)

### கந்தவனம் உற்சவம்

பொலிகண்டி, கந்தவனம் சுப்பிரமணியசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் ,எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும், 13 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (17)



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சுகதாஸ், அமெரிக்காவுக்கு உயர்கல்வி பெறச் செல்வதை முன்னிட்டு, நடத்தப்பட்ட பாராட்டு விழாவில், தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா உரையாற்றுகிறார்.





**நிறைஞ்சனாஸ் சங்கானை**

சரத்குமார் (இரு வேடம்), தேவயானி நடிப்பில்

**சூரிய வம்சம்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

RED DRAGON

(சி-974)


## அழைப்புக் கட்டளை
## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வழக்கு.இல:356

சாந்தாராம் பெண் வத்சலா,
*‘சிதம்பர வாசா’*
*கைதடி மேற்கு, கைதடி,*
*சாவகச்சேரி.*
வழக்காளி

எதிர்

இராமகிருஸ்ணன் சாந்தாராம்
*தும்பளை,*
*புலோலி, பருத்தித்துறை.*
எதிராளி

*மேற்படி எதிராளிக்கு,*

மேற்படி வழக்காளி தங்களிடமிருந்து, மணநீக்கம் பெறுவதற்கு இந்த நீதிமன்றில் உமக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாராதலினால், இவ்வழக்குக்கான பராதுக்கு உமது மறுமொழியை 2003 ஆம் ஆண்டு 07 மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு, சொல்லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மறுமொழியை அணைக்கத்தவறும் பட்சத்தில் எதிராளியான நீவீர் இல்லாமலே ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்டமுறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றை மன்றில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2003 ஆண்டு 06 மாதம் 10 திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
**து.ஜெயதீஸ்வரன்**
பதிவாளருக்காக
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

**வரைவு சி.வீரகத்திப்பிள்ளை**
**சட்டத்தரணி**

(389)

## வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில்
# மாணவருக்கான தளபாடங்கள் விநியோகிக்கப்படாமல் தேக்கம்!

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கென, ‘நிகொட்’ நிறுவனத்தால் வழங்கப்பட்ட தளபாடங்கள் - வழங்கப்படாமல் மருதங்கேணி பிரதேச செயலாளர் பணிமனையில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு தொகுதித் தளபாடங்கள், ஏ-9 பாதையூடாகக் கொண்டுவரப்பட்டு, மருதங்கேணி பிரதேச செயலாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கு முதலிடம் கொடுத்தே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், ‘நிகொட்’ நிறுவனம் இந்தத் தளபாடங்களை வழங்கியிருந்தது.

கடந்த வாரம், கல்வித்திணைக்கள அதிகாரிகள் - இத்தளபாடங்களைப் பொறுப்பேற்று, பாடசாலைக்கு வழங்கவென, வாகனங்கள் சகிதம் வந்திருந்தனர். ஆனால், தளபாடங்களைக் கையளிப்பதற்கு எவரும் இல்லாத நிலையில் அதிகாரிகள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இதனால், இத்தளபாடங்கள் - பாடசாலைகளுக்கு வழங்கப்படாமல் தேங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைகளில், தளபாடங்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் நிலத்திலிருந்து தமது கல்வியைக் கற்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி பிரதேச செயலாளர், தளபாடங்களை வைப்பதற்கு இடம்கொடுத்ததாகவும், ஆனால் - அவர் அதைப் பாரமெடுக்கவில்லை என்றும் தெரியவருகிறது. (17)

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டணி;

# உடன்பாடு ஜூலை 8 ஆம் திகதிக்கு முன்!

## நிட்டம்புவ மாநாட்டில் அனுரா பண்டாரநாயக்க

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான - கூட்டணி தொடர்பான உடன்படிக்கை அடுத்தமாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் - கைச்சாத்திடப்படும் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நிட்டம்புவ சங்கபோதி மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதின்னான்காவது சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றியபோதே - அனுரா பண்டாரநாயக்க இந்த அறிவிப்பை விடுத்தார்.

சுமார் 950 பேராளர்கள்வரை கலந்துகொண்ட இந்த மாநாட்டில், அனுரா பண்டாரநாயக்க தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில் -

ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின், மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும், நாட்டு மக்களும் ஒன்று திரள வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவியிலிருந்து வீழ்த்துவதற்காக, ஜே.வி.பியுடன் மட்டுமன்றி- எந்தக் கட்சியுடனும் கூட்டுச்சேர்வதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.



இந்த மாநாட்டில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ,

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பதற்கான நடவடிக்கைகளையே எடுத்துவருகிறது.

இதற்காக, அரசாங்கம் - புலிகளுக்கு உத்தியோகப்பற்றற்ற வகையில் ஈழத்தை வழங்கி, நாட்டைத் துண்டாடுவதற்கு முயற்சிசெய்து வருகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தும் எந்த முயற்சியையும் தடுத்து நிறுத்துவதில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமூச்சுடன் செயற்படும் என்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு விவகாரத்தில் பொறுப்பற்ற முறையில் ஊடகங்கள்!

## குற்றஞ்சாட்டுகிறார் சுனந்த தேசப்பிரிய

வடக்கு - கிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக, சில ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதாகவும், இதனால் நிலைமைகள் மோசமடையும் ஆபத்துக்கள் இருப்பதாகவும், பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய கருத்து வெளியிட்டுள்ளார்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளராகவும், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளராகவும், பணியாற்றும் சுனந்த தேசப்பிரிய - 'தற்போதைய அரசியற்சூழலில் ஊடகங்களின் பொறுப்பு' என்பது பற்றி நிகழ்த்திய உரையிலேயே, மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்குப் பிரச்சினைகள் சம்பந்தமான செய்திகளை வெளியிடும்போது - ஊடகங்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும்.


பொதுமக்களினது நன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், செயதிகளை வெளியிடுவதற்கு ஊடகங்கள் முன்வரவேண்டும்.

அண்மைக்காலத்தில் சில ஊடகங்கள், நாட்டின் நிலைமைகளை மோசமாக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் முக்கியத்துவத்துக்குப் பதிலாக, இந்த மாநாட்டில் புலிகளின் பங்கேற்புக் குறித்து, திரிபான செய்திகளை வெளியிட்டு, ஊடகங்கள் குழப்பங்களை ஏற்படுத்தின என்றும், அவர் மேலும் தெரிவித்தார். (க)



நிட்டம்புவ மாநாட்டில் - அநுரா, சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷ.



ஜனாதிபதி சந்திரிகாவும், மகிந்தவும் சிறையிலிருந்து மாநாட்டுக்கு வந்த, அனுருத்த ரத்வத்தவுடன் உரையாடுகின்றார்கள்.

# பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவரையும் பிரதமர் ரணில் சந்தித்துப் பேசுவார்!

## சமாதான முயற்சிகள் குறித்து அவருக்கு விளக்கப்படும்

(லண்டன்)

பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் டங்கன் சிமித்தையும். சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகப் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்தும், பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவருடன் - பிரதமர் ரணில் கலந்துரையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவாரகாலப் பயணமாக லண்டனுக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் - வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் மற்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் சென்றுள்ளனர்.

இவர்கள், பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்கான புதிய செயலாளர் பரோனஸ், அமோஸையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரிட்டனின், சர்வதேச அபிவிருத்திக்கான செயலாளராக பரோனஸ் அமோஸ், அண்மையிலேயே நியமிக்கப்பட்டிருந்தார். முன்னர், இப்பதவியிலிருந்த கிளேயர் ஷொட், ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு, பிரிட்டன் ஒத்துழைப்பு வழங்கியதைக் கண்டித்து, இப்பதவியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின்போது, ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியுதவிகளைப் பயன்படுத்துவது தொடர்பாகவும், பிரிட்டனிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# வற்றாப்பளைக் காட்டில் அழுகிய நிலையில் சடலம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வற்றாப்பளையிலுள்ள, ஆனைவிழுந்தான் காட்டுப் பகுதியில், அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற ஒருவர், இந்தச் சடலத்தைக் கண்டுபிடித்து - தமிழீழ காவற்துறையினருக்குத் தெரியப்படுத்தினார்.

இதையடுத்து, அப்பகுதிக்குச் சென்ற முள்ளியவளை காவல்பணிமனையைச் சேர்ந்த காவற்துறையினர், விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்தவரின் விபரங்கள் எதுவும் தெரியாததால், இது குறித்து-தகவல் தெரிந்தவர்கள், உடன் தொடர்புகொள்ளுமாறு, முள்ளியவளை காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

# சுனில் மெண்டிஸ் படுகொலை தொடர்பாக ஐ.தே.க. அரசியல்வாதியிடம் விசாரணை!

## மேற்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

மேல்மாகாணசபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்-சுனில் மெண்டிஸ் படுகொலை தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்டுவரும், குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் - ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த, முக்கிய அரசியல்வாதி ஒருவரை, விசாரணை செய்திருப்பதாக, மேற்குப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா நியமித்திருந்தார்.

இந்தப் பொலிஸ் குழுவினர் - மோப்பநாயின் உதவியுடன் - தடயங்களைத் தேடியபோது, ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எட்வேர்ட் சில்வா என்பவரின் வீட்டிலுள்ள குளிர்சாதனப்பெட்டிவரை மோப்பநாய் சென்றிருந்தது.

இதையடுத்து, மேற்படி அமைப்பாளர் எட்வேர்ட் சில்வாவைக் கைது செய்து, விசாரணை நடத்திய பொலிஸார் - நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அரசியல்வாதி ஒருவரிடம், இரண்டு மணி நேரம் விசாரணைகளை நடத்தினர்.

மேற்படி அரசியல்வாதியை, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, பொலிஸார் - அங்கு வைத்து, இந்த கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதாக - மேற்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

மேல்மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ் - கடந்த 16 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில், கந்தானை - எல்பிட்டிவெலவில் உள்ள அவரது வீட்டில் வைத்து, இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக - விசாரணைகளை நடத்துவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவொன்றை, பொலிஸ் யிடம், மேலும் விசாரணைகள் நடத்தப்படவிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஐ.தே.க முக்கிய அரசியல்வாதியின் பெயரை வெளியிடுவதறகு அவர் மறுத்துவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கட்டுத்துவக்கு வெடித்து காயம்!


வவுனியா மாவட்டம் - செட்டிக்குளம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில், காயமுற்ற ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

செட்டிக்குளம் - இலுப்பைக்குளம் என்ற இடத்தில், கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், இலுப்பைக் குளத்தை சேர்ந்த மாணிக்கம் ரவி என்பவரே காயமடைந்தவராவார்.

இவர், சிகிச்சைக்காக செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# மீன்பிடி அமைச்சின் செயலாளரை அவமானப்படுத்தினார் அமைச்சர்!



மகிந்த விஜயசேக

தனது உத்தரவுக்கமைய நியமனம் ஒன்றை வழங்கமறுத்த செயலாளரை - கடற்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த விஜேயசேகர அவமானப்படுத்தி, கூட்டத்தை விட்டு வெளியேற்றினார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

கடற்தொழில், நீரியல்வள அமைச்சினால் - 'கடலோரவள நிர்வாகத் திட்டம்' என்ற புதிய திட்டமொன்றை அமுல்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்குப் பணிப்பாளராக ஒருவரின் பெயரை அமைச்சர் மகிந்த விஜயசேகர தனது செயலாளரிடம் சிபாரிசு செய்திருந்தார்.

ஆனால், அமைச்சரால் சிபாரிசு செய்யப்பட்டவர் - மேற்படி திட்டத்தின் பணிப்பாளர் பதவிக்கு, எந்தவகையிலும் பொருத்தமானவரல்ல என்று கூறி -

கடற்தொழில், நீரியல்வளங்கள் அமைச்சின் செயலாளர் மன்னம் பெரும, இந்த நியமனத்தை வழங்கவில்லை.

அத்துடன், வேறு பொருத்தமானவரை, இந்தப் பதவியில் அமர்த்துவதற்கும், அமைச்சின் செயலாளர் நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

இதையறிந்த அமைச்சர் மகிந்த விஜயசேகர, பெருமளவு அதிகாரிகள் கலந்துகொண்டிருந்த கூட்டமொன்றில் வைத்து - அமைச்சின் செயலாளர் மன்னம்பெருமாவை - ஏசி அவமானப்படுத்தியதுடன், கூட்டத்தைவிட்டு வெளியேறுமாறும் கட்டளையிட்டார்.

### புத்தர் சிலைகளை திருடிய பிக்கு கைது!

மாத்தறை மாவட்டத்திலுள்ள விகாரையொன்றிலிருந்து, பழைமை வாய்ந்த புத்தர் சிலைகளைத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் பௌத்த பிக்கு ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சுமார் நூற்றைம்பது வருடகாலம் பழைமை வாய்ந்த நான்கு புத்தர் சிலைகளையே, இந்தப் பிக்கு - விகாரையிலிருந்து திருடியதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

# வவுனியா - கொழும்பு இரவு ரயிலில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு!

வவுனியா - கொழும்பு இரவு ரயிலில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது. வவுனியா - கொழும்பு இரவு தபால் ரயிலில், பயணம் செய்யும் பிரயாணிகளுடன் நட்புறவாகக் கலந்துரையாடி- அவர்களிடம் கொள்ளையிடும் சம்பவங்கள், சமீபத்தில் அதிகரித்திருக்கின்றன.

ரயிலில் பயணம் செய்யும்போது - நண்பர்கள் போல் நடித்து, அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்ளும் திருடர்கள், பயணிகளுக்கு மயக்க மருந்து கலந்த உணவுப் பொருட்களைக் கொடுத்து, மயக்கிவிட்டு உடமைகளைச் சூறையாடிச் செல்கின்றனர்.

கடந்த 16 ஆம் திகதி இரவு - தபால் ரயிலில், வவுனியா வந்த மூவர மயக்கமடைந்த நிலையில், ரயில் நிலைய ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு - வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த இவர்களிடமிருந்து, திருடர்கள் உடைமைகளை அபகரித்து விட்டதாகப் பின்னர் தெரியவந்தது.

# வசிப்பிட முகவரி தெரியாததால் புலமைப் பரிசில் திரும்பியது!

'சிசுசவிய' புலமைப் பரிசிலுக்கு- கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவான மாணவர்கள் - தற்போது வேறு மாவட்டங்களில் கல்வி பயில்வதால், அவர்களின் இருப்பிட முகவரி தெரியாமல் - புலமைப்பரிசில் தொகை கிளிநொச்சி மக்கள் வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்படி புலமைப்பரிசிலுக்கு, கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஏழு மாணவர்கள் தெரிவாகியிருந்தனர். இவர்கள் தற்போது, கிளிநொசசி மாவட்டத்துக்கு வெளியே கல்வி கற்று வருகின்றனர்.

இதனால், இவர்களின் இருப்பிடங்கள் தொடர்பான முகவரிகள் தெரியாததால், மக்கள் வங்கி - புலமைப் பரிசில் கொடுப்பனவைத் தலைமையகத்துக்குத் திருப்பி அனுப்பியுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி பரீட்சார்த்திகளான - வி.சிந்துலேகா, என். யோகநாதன், றி.சலீன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற கே.பரராஜசேகரன் - முழங்காவில் மகாவித்தியாலயப் பரீட்சார்த்திகளான - ஆர்.கம்சவதனி, கோ.மகேஸ்வரன் - கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஜயந்தா ஆகியோரின் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளே இருப்பிட விபரங்கள் தெரியாததால், திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ், மாணவர் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா வீதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாக மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

# கிளிநொச்சியில் சிரமதானப் பணியில் குருகுலம், காந்தி நிலையச் சிறார்கள்!

(கிளிநொச்சி)

குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையம், காந்தி நிலையம் ஆகியவற்றின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, கடந்த சனிக்கிழமை சிரமதான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கந்தசாமி ஞாபகார்த்த பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம், மலேரியா தடுப்பு நிலையம், தாய், சேய் சிகிச்சை நிலையம் மற்றும் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் என்பன குருகுலம் மற்றும் காந்தி இல்லச் சிறார்களால் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்பட்டன.

# கிளிநொச்சி – அக்கராயன் பகுதியில் கோப்பி, அன்னாசி செய்கைகள் வெற்றி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் - அக்கராயன்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் - கோப்பி, திராட்சை, வெற்றிலை, அன்னாசிப்பயிர்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு, செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக, அக்கராயன்குளம் விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங்கம் தெரிவித்தார்.

கோப்பி, திராட்சை, வெற்றிலை, அன்னாசிப் பயிர்களைப் பயிரிடுவதில் - ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பகுதி விவசாயிகள் அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னை, வாழை போன்ற பயிர்களுக்குள் - ஊடுபயிராக இவை பயிரிடப்படுவதால், நிலப்பயன்பாட்டையும், நீர் முகாமைத்துவத்தையும் பேணிக் கொள்ள முடிவதாகவும், விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.

இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான பயிற்சிகளை - விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், விவசாயத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது. ஏனைய இடங்களுடன் ஒப்பீடு செய்யும்போது, எவ்வித வித்தியாசமுமின்றி இந்தப் பயிர்கள் வளர்வதாகவும், இப்பயிர்களில் எதிர்பார்க்கப்படும் உச்ச விளைச்சலை - எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று விவசாயத் திணைக்களம் நம்புவதாகவும் - இதனால், இப்பயிர்களை ஏனைய பகுதிகளிலும் அறிமுகப்படுத்துவது பற்றி ஆராயப்படுவதாகவும், அக்கராயன் விவசாயப் போதனாசிரியர் மேலும் தெரிவித்தார்.






## சின்னஞ்சிறு செய்திகள்

### இளவாலையில் கிராமிய வங்கி

(இளவாலை)

இளவாலை மக்களின் நன்மை கருதி, அப்பகுதியில் கூட்டுறவுக் கிராமிய வங்கியொன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இளவாலைக் கிராம மக்கள்- தமது கூட்டுறவுக் கிராமிய வங்கியுடனான செயற்பாடுகளுக்குப் பண்டத்தரிப்புக் கிராமிய வங்கிக்கே செல்லவேண்டியநிலை இருந்தது. இதனைக் கவனத்திற்கொண்டே, இளவாலைப் பகுதியில் புதிதாகக் கிராமிய வங்கியொன்று திறந்து வைக்கப்பட்டது. (41)

### தப்பியோடிய சந்தேகநபர் பிடிபட்டார்!

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டபோது, தப்பியோடிய கைதி - மீண்டும் பொலிஸாரிடம் அகப்பட்டார்.

திருட்டுக் குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்ட கைதியொருவர், நோய்வாய்ப்பட்டதன் காரணமாக, கடந்த 19 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டார்.

தண்ணீர் குடிக்கச் சென்று வருவதாகக் கூறிவிட்டு - மேற்படி சந்தேகநபர் தப்பியோடினார்.

இந்தச் சம்பவத்தையடுத்துப் பொலிஸார் தீவிர தேடுதலை நடத்தி, சுழிபுரம் பகுதியில் வைத்து மீண்டும் அவரைக் கைதுசெய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மேற்படி சந்தேகநபரைப் பதினான்கு நாட்கள் விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.


### தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

உடலில் பலத்த தீக்காயங்களுடன், நேற்று அதிகாலை 1.15 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் - அரை மணி நேரத்திலேயே உயிரிழந்தார்.

நயினாதீவு, எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த துரைசிங்கம் சந்திரலிங்கம் (வயது 43) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலம், மரண விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (121)



சுதுமலை - புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின்போது, தீர்த்தோற்சவத்தன்று அம்பாளும், பரிவாரமூர்த்திகளும் தீர்த்தமாடச் செல்லும் காட்சியைப் படத்தில் காணலாம். (46)




அண்மையில் நடைபெற்ற மு.சிங்கராயர் எழுதிய 'கூவிப்பறந்த கோகிலங்கள்' நூல் வெளியீட்டுவிழாவில், யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன், வெளியீட்டுரையை நிகழ்த்துவதையும் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

# கள்ளுத்தவறணையை அகற்றுமாறு இளவாலைப் பகுதி மக்கள் மகஜர்

(இளவாலை)

இளவாலை "சென்பரட்" பகுதியில் அமைந்திருக்கும் கள்ளுத்தவறணையை அகற்றுமாறுகோரி, அப்பகுதி மக்கள் - பனை, தென்னை வள அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இத்தவறணையைச் சூழ பல குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில், இங்கு கள்ளுக் குடிக்க வருபவர்களால், அப்பகுதி மக்கள் பலதத அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அத்துடன், இத்தவறணைக்கு அருகில் - முன்பள்ளி, ஆலயம் என்பனவும் அமைந்துள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டு, இத்தவறணையை அகற்றுமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள்- பண்டத்தரிப்பு பனை, தென்னைவள அபிவிருத்திப் பொது முகாமையாளர், சித்தங்கேணி கலால் திணைக்களம், இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (41)






# புத்தகக் கடைகளில் நள்ளிரவில் சிறார் கூட்டம்!

'ஹாரி பொற்றர்' - **Harry Potter** - இவர் யாரென்று நினைக்கிறீர்களா?

நீங்கள் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் -ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் சென்றிருந்தால் இதற்கு ஈஸியாகப் பதிலளித்திருப்பீர்கள்.

இங்கு ஒவ்வொரு புத்தகக் கடைக்கு முன்பாகவும் - பனியிலும் குளிரிலும் கொட்டக்கொட்டக் காத்திருந்தது சிறார்கள் கூட்டம்.

இவர்கள் எதிர்பார்த்திருந்தது - சினிமா நடிகர் நடிகயரையா? இல்லை, பிரபல விளையாட்டு வீரர்களையா? - அப்படி ஒன்றுமே இல்லை.

உலகின் அதிகளவு விற்பனையாகும் J.K.ரோலிங்கின் - 'ஹாரி பொற்றர்' புத்தகத்திற்காகத்தான் இந்தக் காத்திருப்பு நடந்தது.

பிரிட்டனிலும் நியூயோர்க்கிலும் ஏன் பீகிங்கிலும், கோலாலம்பூரிலும் கூட - நள்ளிரவு வேளைவரை புத்தகக்கடைகள் திறந்திருந்தன.

விமானங்களில் புத்தகம் வந்திறங்கியதும்தான் தாமதம் - சின்னஞ் சிறுசுகள் ஆர்வம் கொப்பளிக்க வாங்கினார்கள் இந்தப் புத்தகத்தை.

## ஹாரி பொற்றர் - இது மாயமா? மந்திரமா?

'ஹாரி பொற்றரும்' அவனது நண்பர்களான ரொன் (**Ron**) மற்றும் ஹெர்மியோன் (**Hermione**) ஆகியோரும் புரியும் சாகசங்கள் தான் இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம்.

'ஹாரி பெற்றர்' தனது மந்திர சக்தியின் துணைகொண்டு, அடுத்துச் செய்யப்போகும் அட்டகாசம் எதுவென்பதைக் காண்பிப்பதற்காக, சிறார்கள் காட்டிய ஆர்வத்தைப் பார்த்தீர்களா?

பிரிட்டனிலுள்ள 'ரோயல் மெய்ல்' என்ற தபால்சேவை அமைப்பு, கடந்த சனியன்று மட்டும், ஐந்து இலட்சம் புத்தகங்களை புத்தகக்கடைகளுக்கு எடுத்துச்சென்றதாகக் கூறியது.

தொடராக வரும் இந்த நூல்களில் - இம்முறை 766 பக்கங்களில் புதிய புத்தகம் வெளிவந்திருக்கிறது.

இறுதியாக சிறுமி ஒருத்தி, கூறியதை அப்படியே உங்களுக்குச் சொல்லலாம்.

லண்டன், கிங்ஸ் குரொஸ் தெருவிலுள்ள புத்தகக் கடையொன்றுக்கு வந்த சிறுமி, கண்களில் ஆர்வம் பொங்க இப்படிச் சொன்னாள்.

"இரண்டு புத்தகங்கள் வாங்கிவிட்டேன். ஒன்று பாதுகாக்க, இன்னொன்று வாசிக்க. மூன்று நாட்களுக்குள் இதை வாசித்துவிடுவேன். 766 பக்கங்கள் பெரிய வேலையல்லை" என்றாள் அந்தச் சிறுமி. இத்தனைக்கும் அவளது வயது எத்தனை தெரியுமா? பத்தே பத்துத்தான்!

# திரை விமர்சனம்



## பாறை



வழக்கமாக நகைச்சுவை கலந்த படங்களை எடுத்து வந்த கே.எஸ்.ரவிக்குமார் - இப்போது கொஞ்சம் சீரியஸாகி இருக்கிறார். மலையாளத்தில் 'மகாயானம் என்று வெளிவந்த திரைப்படம், தமிழில் பாறை ஆகியிருக்கிறது.

சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யா கிருஷ்ணன் (இனி ரம்யா கிருஷ்ணவம்சி) ஆகியோரின் நடிப்பால் 'பாறை' பார்க்கக் கூடியதொரு படமாகிறது.

வாழ்க்கையின் ஆரம்பத்தில் அடிபட்ட லொறி டிரைவரான சரத்குமாருக்கு நண்பர்களோ, உறவினர்களோ எவருமில்லை.

அவரது லொறியின் நடத்துனர் ஜெயராம், சரத்குமாருக்கு முற்றிலும் எதிரான குணமுடையவர். சந்தோஷமாக வாழ்கின்ற கொள்கை கொண்ட ஜெயராமுக்கு - தாய் வடிவுக்கரசி, மனைவி மீனா, மகள் ஆகியோருடன் சிறிய வீட்டில் கனவு வாழ்க்கை.

சரத்குமாரும் ஜெயராமும் ஒருவரையொருவர் நன்கு புரிந்தவர்கள். ஒருநாள் தனது குடும்பத்தினரைக் காண வீடுசெல்லும் ஜெயராம் விபத்தில் இறக்க - அவரது உடலுடன் வீடு செல்கிறார் சரத்குமார்.

அந்தக் குடும்பத்தின் அவலம், அவரை அங்கேயே தங்கவைத்து விடுகிறது. நண்பனின் கனவான சிறிய வீட்டைக் கட்ட முனைகிறார் சரத்குமார்.



இடையே - பண்ணையார் விஜயன் ஏழைமக்களை சுரண்டுவதும், தேனீர்க்கடை முதலாளியான ரம்யா கிருஷ்ணவம்சியின் அடாவடி நடிப்பும் - படத்தினை வேகப்படுத்துகின்றன.

நண்பனின் மனைவியான மீனாவுக்கும் சரத்குமாருக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி ஊரார் சந்தேகம் கிளப்புவதும், ரம்யா கிருஷ்ணவம்சியின் சரத்குமார் மீதான பாசமும், கிராமத்தவர்களை விஜயனின் பிடியிலிருந்து மீட்பதும்தான் படத்தின் கதை.

சரத்குமார் படத்தின் பெருமளவு நேரத்தில் வாயைத் திறக்காமலேயே நடிப்பை வெளிக் காட்டுகிறார். அவரது இறுக்கமான கதாபாத்திரத்திற்கு குறைந்த வசனங்களே அழகு.

ஜெயராம் சிறிது நேரமே வந்தாலும் கலகலப்பாக்குகிறார். இசையமைப்பாளர் சபேஷ்-முரளியின் இசையில், அவரது சகோதர் தேவாவின் தாக்கம் அழுத்தமாகத் தெரிகிறது.

பல படங்களின் பாதிப்புக்களுடன் பாறை, புதிய மொந்தையில் பழைய கள்.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்



93-இல் வெளிவந்த 'ஜூராஸிக் பார்க்' படமும் மாபெரும் வரலாறு படைத்த படம். இந்தப் படம் - மொத்தம் வசூல் செய்துள்ள தொகை ஐயாயிரம் கோடி ரூபாய்.

ஆறரைக் கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த பிரம்மாண்டமான டைனோஸர் உருவங்களைக் கடித்த கொசு ஒன்று, உறைந்த நிலையில் பத்திரமாக மண்ணுக்குள் புதைந்திருப்பதைக் கண்டுபிடிக்கிறது ஓர் ஆராய்ச்சிக் குழு. அந்தக் கொசுவின் உடலில் இருப்பது டைனோஸரின் ரத்தம் என்பது தெரிந்தவுடன், அதைக்கொண்டு டைனோஸரின் டி.என்.ஏயைக் கண்டுபிடிக்கிறார்கள். அந்த அடிப்படையில் விதவிதமான டைனோஸர்கள் மீண்டும் உயிருடன் உருவாக்கப்படுகின்றன. 'அதிலும் இலைதளை போன்றவற்றை மட்டுமே உண்ணும் ஒரு வகையும், மாமிசத்தைச் சாப்பிடும் மற்றொரு வகையுமாக இரண்டு வகை.

வெவ்வேறு அளவுகளில் உருவாக்கப்படும் டைனோஸர்களைப் பத்திரமாக வைத்து, ஓர் உயிரியல் பூங்காவை இயற்கையான சூழலில் அமைக்கின்றனர். இதைப் பார்வையிட வருபவர்களிடம் இருந்து கட்டணம் வசூலிப்பது திட்டம். இந்தப் பூங்காவின் உரிமையாளரான ஹாமாண்ட்- கணித மேதை ஒருவரையும், கொம்பியூட்டர் விஞ்ஞானி ஒருவரையும் வரவழைத்து, பார்வையாளர்களை அனுமதிக்கும் உத்தரவுக்காக - அரசாங்கத்துக்கு சிபாரிசுசெய்யக் கோருகிறார். ஹாமாண்ட்டின் பேரக் குழந்தைகள் இருவரும் இந்தக் குழுவினருடன் சேர்ந்துகொள்கின்றனர். திறந்தவெளிக் காட்டுப் பகுதியில் இரும்புக்கம்பி வேலி அமைத்து, அதில் 10 ஆயிரம் வோல்ற் மின்சாரம் பாயும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. டைனோஸர்கள் பார்வையாளர்கள் பக்கம் வராதிருப்பதற்காக இந்த ஏற்பாடு.

பூங்காவைச் சுற்றி வருவதற்காக தொடர்ச்சியாக இயங்கும் கார்கள், தண்டவாளம் போன்ற பாதையில் செல்கின்றன. அனைத்தையும் கொம்பியூட்டர்களே நிர்வகிக்கின்றன.

இதேபோல், மற்றொரு பூங்காவை அமைக்கவிரும்பும் பிறிதொரு நிறுவனம், ஜூராசிக் பார்க்கின் கொம்பியூட்டர் நிபுணரைக் கைக்குள் போட்டுக்கொள்கின்றது.

புயலும், மழையும் நிறைந்த ஒரு நள்ளிரவில் - பாதுகாப்பு ஏற்பாடுகளை எல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு கொம்பியூட்டர்

## ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்

பொறுப்பாளர் "டைனோஸர்" கருக்களை எடுத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேற முயற்சி செய்கிறார்.

வேலிகளில் மின்சாரம் பாயாததால், டைனோசர்கள் வேலியை உடைத்துக் கொண்டு கண்டபடி பாய்கின்றன. அதன் பின்னர், டைனோஸர்களின் அட்டகாசம் தான்! அவற்றிடம் இருந்து தப்பிக்க மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டங்களும், சாகசமும் கதையை நீளுகின்றன.

கொம்பியூட்டரால் உருவாக்கப்பட்ட விம்பங்கள் திரையில் நிஜமான உருவங்களைப் போலவே மனிதர்களை துரத்தி வேட்டையாடுகின்றன. மனிதர்கள் அவற்றிடம் இருந்து தப்பிப்பதுதான் படத்தின் பின்பகுதி. உண்மையிலேயே இரத்த தாகம் கொண்ட, மாமிசப் பட்சணிகளான மிருகங்கள் போலவே டைனோஸர்கள் உயிருள்ள மனிதர்களைத் தாக்குகின்றன, அல்லது தாக்க முயல்கின்றன, துரத்துகின்றன.

## பகுதி-4

விஞ்ஞான நுட்பங்களை பெருமளவு பயன்படுத்தியுள்ள படம் இது என்று அடித்துச் சொல்லாம். இந்தப் படத்தின் படப்பிடிப்பு, ஹவாய் தீவில் நடைபெற்றபோது உண்மையிலேயே புயலடித்து டைரக்டர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் உட்பட படப்பிடிப்புக் குழுவினர் தவியாய்த் தவித்தனராம்.

ரசிகர்கள் மத்தியில் மறக்கமுடியாத ஓர் அனுபவத்தை ஏற்படுத்திய ஒரு படம் என்று இதைக் குறிப்பிடலாம். படத்தின் மற்ற அம்சங்களை விட, ஸ்பீல்பெர்கின் வழக்கமான வியாபகமே மனதில் நிற்கிறது.


இந்தப் படத்தில் - **"Special effects"** ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, எடிட்டிங் ஆகிய பொறுப்புக்களை கவனித்த நால்வரும் ஒஸ்கார் விருதுகளைப் பெற்றனர்.

93-ஆம் ஆண்டில் வெளியான ஸ்பீல்பேர்க்கின் மற்றொரு கறுப்பு வெள்ளைப் படமான "ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட்" - நாசிகள் யூதர்களின் மீது அவிழ்த்துவிட்ட கொடுமைகளை விளக்கியது. பிறப்பில் ஒரு யூதரான ஸ்பீல்பேர்க் இந்தப் படத்தை வழக்கமான அவரது பாணியில் இருந்து மாற்றி எடுத்திருக்கிறார். வியாபார ரீதியாக ஜூரசிக்பார்க்குடன் இந்தப் படத்தை ஒப்பிடமுடியாது என்றாலும், ஸ்பீல்பெர்க்குக்கு மன நிறைவை அளித்த படம் இது. அவருக்கு சிறந்த டைரக்டருகான ஒஸ்கார் விருதையும் இந்தப் படம் பெற்றுத்தந்துள்ளது.

"ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட்" மொத்தம் ஏழு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது. சிறந்த படம், சிறந்த இயக்குநர், திரைக்கதை, ஒளிப்பதிவு, இசை, கலைப்படத்தொகுப்பு ஆகியவற்றுக்காக இவ்விருதுகள் வழங்கப்பட்டன. 21.03.94 ஆம் திகதி அன்று நடைபெற்ற 66 ஆவது ஒஸ்கார் பரிசளிப்பு விழாவில் - பரிசைப் பெற்றுக்கொண்ட ஸ்பீல்பேர்க் கூறினார் - "இந்த விருதுகள் நீண்ட கால வறட்சியில் தவித்த எனக்குக் கிடைத்த சுவையான குடிநீர்!".

எத்தனையோமுறை ஸ்பீல்பெர்க் ஒஸ்கார் விருது பெற்றிருந்தாலும், சிறந்த இயக்குநர் என்ற முறையில் முதன்முதலாக பெற்றது "ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட்"டுக்காகத்தான். ஜூராசிக் பார்க், 'ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட்' இரண்டுக்குமாக அவரது படங்களுக்குக் கிடைத்தது மொத்தம் 11 விருதுகள்.


ஸ்பீல்பெர்க்கின் "ஷிண்ட்லேர்ஸ் லிஸ்ட்" படம் அவரது படங்களிலேயே ஒரு மைல் கல் எனலாம்.




இதுவரை கற்பனைவளம் உள்ள பான்டசி படங்களை மட்டுமே இயக்கிவந்த, வெற்றிகரமான வியாபார இயக்குநரான ஸ்பீல்பெர்க் - இப்படத்தை முற்றிலும் மாறுபட்ட முறையில் வழங்கியுள்ளார். இந்தப் படத்தில் இடம்பெற்றிருக்கும் சம்பவங்கள், வரலாற்று ஆதாரம் கொண்டவை. ஸ்பீல்பெர்க் இதனை மிகவும் ஈடுபாட்டுடன் படைத்துள்ளார்.

(தொடரும்...)

## யானை – மனிதர்களிடையே



"அந்த யானை - எனது மனைவியைப் பற்றி இழுத்தது. அவளது நெஞ்சுமீது தனது காலைப் பதித்தது. அவ்வளவு தான்" - கண்களில் நீர்மல்கக் கூறுகிறார் 59 வயதான புஞ்சி பண்டா.

கும்புக்வெவ கிராமத்தைச் சேர்ந்த இவருக்கும், இவரது கிராமத்தவருக்கும் காட்டு யானைகளால் ஏற்பட்டுவரும் அழிவுகள் மிகப் பாரதூரமானவை.

சராசரியாக - வாரமொன்றுக்கு இந்தக் கிராமத்தாரில் ஒவ்வொருவரும், பின்னர் பழிக்குப்பழியாக மூன்று காட்டு

## கும்புக்வெவவில் ஒரு போர்



யானைகளும் பலியாவது - சர்வசாதாரணமாகிவிட்டது.

கும்புக்வெவ கிராம மக்களுக்கும் காட்டு யானைகளுக்குமான போராட்டம் இன்று நேற்றானதல்ல.

ஆண்டுக்கணக்கில் தொடரும் இந்த யுத்தத்தில் - கிராமத்தாரும் அஞ்சவில்லை. யானைகளும் சலிப்படையவில்லை.

உண்மையில் - காட்டு யானைகள், இந்தக் கிராமத்து மனிதர்களைத் தாக்க வேண்டியதன் காரணம் பற்றி ஆராய்ந்த வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் -

கும்புக்வெவ காட்டுப்பகுதி - வயல்களாலும் ஏனைய நடவடிக்கைகளாலும் குறுக்கப்பட்டு வருவதால், நடமாட இடமின்றி கிராமத்துக்குள் யானைகள் நுழைவதாகவும், அவை மனிதர்களைக் கண்டு அச்சமடைந்து தாக்கத் தொடங்குவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால் - அதேவேளை, மனிதர்களும் யானைகள் மீது துப்பாக்கிகளால் சுடுவதும் அவற்றின் ஆத்திரத்தைக்கிளப்பி வருவதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதுவாக இருந்தாலும், கும்புக்வெவ - அழிவிலிருந்து தப்பி ஒரு சமாதானத்தை வேண்டிநிற்கிறது என்பது மட்டும் உண்மையாகும்.

## சூரியனருகே சாதனை செய்யும் 'சோகோ'வுக்கும் ஒரு சோகம்!



சூரியனுக்கு மிகவும் நெருங்கிச் சென்று, தன்னை ஒறுத்து, பூமிக்கு தவல்களை வாரி வழங்கிக்கொண்டிருந்த 'சோகோ' (Solar and He-Liospheric Observatory - Soho) விண்கலம், பிரச்சினைகளை எதிர்நோக்கத் தொடங்கிவிட்டது.

1995 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்ட சோகோ, புவிக்கும் சூரியனுக்கும் இடையே சென்று தன்னை நிலைநிறுத்தியிருந்தது.

புவியிலிருந்து 1.6 மில்லியன் கிலோமீற்றர் தொலைவுவரை சென்ற இந்த விண்கலம்தான், சூரியனுக்கு மிக அருகில் சென்ற முதலாவது விண்கலமாகும்.

சூரியனின் கவர்ச்சி விசைக்குள் சிக்காது, தப்பிப் பிழைத்தவாறு - சூரியனின் அனைத்துச் செயற்பாடுகளையும் பற்றிப் புகைப்படங்களாகவும் வேறுபல மூலங்களில் தகவல்களாகவும் அள்ளித்தந்த 'சோகோ' -

சூரியனிலிருந்து வெளிக்கிளம்பும் காந்தப் புயல்களுக்குள் (Magnetic Storms) தற்போது சிக்கிவிட்டது.

வழக்கமாக இந்த காந்தப்புயல்கள் - விண்கலங்களின் தொடர்புகளை சற்று நேரத்திற்குப் பாதித்துவிட்டு, பின்னர் ஓய்ந்துவிடும்.



ஆனால் - இம்முறை நிலைமை சற்று எல்லை கடந்துவிட்டது. 'சோகோ'வின் விண்திட்டத்தின் முக்கிய விஞ்ஞானியான டொக்டர் பேர்ன்ஹார்ட் ஃபிளெக் (Dr.Bernhart fleck) கூறுவது போன்று - சோகோவின் மோட்டார்கள், கியர்கள் தற்போது செயலிழந்துவிட்டன.

'சோகோ'வின் தகவல்களை அறியும் அன்ரனா - சூரியனிலிருந்து சற்று வேறு பகுதிக்கு திரும்பிவிட்டது. இந்தப்பிரச்சினை கடந்த மாதம் நான்காம் திகதியன்று ஆரம்பமானது.

இதனைத் திருத்துவதற்கு எடுத்த முயற்சிகளும் பலிக்கவில்லை. திருத்தும் இன்னொரு அன்ரெனாவான - Low Gain Antenna 'சோகோ'வில் இல்லாததும் குறையாகிவிட்டது.

எப்படியிருந்தாலும் - 'சோகோ' வழமைக்குத் திரும்பிவரும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஆபத்திற்குக் கிட்டச் சென்றும், அற்புதமான சாதனைகள் புரிபவரை இழக்க யார்தான் விரும்புவார்கள். நாமும் எதிர்பார்ப்போம் 'சோகோ' வழமைக்குத்திரும்பும் என்று.

## காதல் சின்னத்திற்கு கட்டடங்களால் சிறையா?



'நாட்டிற்கு எதிரி - தாஜ்மஹாலின் நண்பன்' பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பும் மனைவியும்.

இந்தியாவில் ஆக்ராவைச் சுற்றிவர எழுந்துள்ள தொழிற்சாலைகளால் - தாஜ்மஹாலின் அழகு கெடுகிறது என, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குரல் கொடுத்தாலும் - அது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருந்துவந்தது.

ஆனால், தற்போது திடீர் ஞானம் கிடைத்தது போல- அரசாங்க அதிகாரிகள் செயற்படத்தொடங்கியிருக்கின்றனர்.

ஆக்ராவில் தாஜ்மஹால் அருகே ஓடும் யமுனா நதிக்கு அருகே 36 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் பெரும் வர்த்தகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்ட வேளையில் -

தாஜ்மஹாலின் - காதலர்களும், அனுதாபிகளும் சுற்றுச்சூழலியலாளர்களும் தெரிவித்த பலத்த எதிர்ப்பினால் இத்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது.


இவ்வாறு தாஜ்மஹாலுக்கு அருகே புதிய கட்டடங்களைக் கட்டுவதால், இந்தக் காதல் சின்னத்தின் தனிப்பெரும் அமைப்பு கட்டடங்களுக்குள் காணாமற்போய்விடும் எனவும்-

ஏற்கனவே யமுனா நதியில் நீர் வற்றுவதால், பாதிக்கப்பட்டிருக்கும் தாஜ்மஹாலின் அத்திவாரம் - இன்னமும் ஆட்டம் கண்டுவிடும் எனவும் கூறப்படுகிறது.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாஜஹான் - தனது காதல் மனைவியான மும்தாஜ்ஜிற்காக கட்டிய இந்த நினைவுச் சின்னத்தை, தனது இறுதிக் காலத்தில் - தாஜ்மஹாலில் இருந்து சில மைல்கள்தொலைவில் உள்ள செங்கோட்டையில் இருந்து பார்த்தபடியே உயிர்விட்டார் என்று வரலாறு கூறுகிறது.

இன்றும் செங்கோட்டைக்குச் செல்பவர்கள், சாஜஹான்-தாஜ்மஹாலைப் பார்த்திருந்த சாளரம் வழியாகத் தாமும் அந்தக் காதல் சின்னத்தை பார்த்து மனம் உருகுவது, சாஜஹானின் காதல் இன்றும் அழியாது வாழ்வதற்கு ஒரு அத்தாட்சியாகும்.

## ஆசியாவின் வயதில் குறைந்த கலாநிதிப் பட்டதாரி!



தாத்தகற் அவதார் துள்சி (Tathagat Avathar Tulsi) வாசிக்கக் கஷ்டமான பெயர் தான். ஆனால், இந்தப் பதினைந்து வயதுச் சிறுவன் சாதித்திருப்பதும் கஷ்டமான வேலைதான்.

ஆசியாவிலேயே மிகக்குறைந்த வயதில், ஆராய்ச்சியில் 'கலாநிதிப் பட்டம்' (Doctor ot Philosophy - PhD) வாங்கப் போகிறான் இந்தச் சிறுவன்.

இந்தியாவின் விஞ்ஞான நிறுவனத்தில் (Indian Institute of Science) - கலாநிதிப் பட்ட ஆராய்ச்சிக்காகச் சேர்ந்திருக்கும் இவன், தனது 17 ஆவது வயதில் பட்டத்தைப் பெறுவான் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுவயதிலிருந்தே கணிதத்தில் ஆர்வம் கொண்ட இவன், 17 ஆவது வயதில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றால், உடனடியாகவே இவன் பேராசிரியராகப் பதவிபெறுவான் என இவனது ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இதுவரை 18 ஆம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தில் வாழ்ந்த Colin Macla- urin என்பவர்தான் தனது 19 ஆவது வயதில் பேராசிரியர் ஆனார். துள்சி அதனை முறியடிப்பான் என்று கூறுகின்றனர்.

தனது இறுதி இலக்கு நோபல் பரிசுதான் என்றும் - இந்தக் கனவிலேயே தான் வாழ்வதாகவும், துள்சி கூறுகின்றான்.

சாதனைக்குத்தான் தடையுண்டா?, வயதுண்டா?

## ஆப்கான் அல்பம்



போரினால் சீரழிந்துள்ள ஆப்கானில், புகைப்படம் எடுப்பதற்கு நவீன கமெரா வசதிப் பற்றாக்குறையால், பழைய கால கமெராவுக்கு முன்பாக - தமது அடையாள அட்டைக்காகப் புகைப்படம் எடுப்பதற்கு 'போஸ்' கொடுக்கும் பொலிஸ்காரர்.



பர்தா அணிவது இப்போது ஆப்கானில் கட்டாயம் இல்லாவிட்டாலும் - பர்தா அணிந்த பெண்கள் மத்தியில், அதனை அணியாத ஒரு சிறுமியும் படத்தில் காணப்படுகிறாள்.




இப்போது - ஆப்கானில் விடிகாலையிலேயே பத்திரிகைகள் கிடைக்கின்றன. இங்குள்ள தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், அமெரிக்கப் படையினருக்காக - ஆங்கிலப் பத்திரிகைகளை விற்கும் ஒரு ஆப்கான் சிறுவன் இவன்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க்கு இனது.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## தம் தலையில் தாமே கொள்ளி வைப்போர் !

அமைதித் தேவதையாகச் சித்திரிக்கப்பட்டு ஆட்சி பீடமேறி, பின்னர் - யுத்த சன்னதமாடி - இன்றும், தனது பழைய அகோரக்குணம் அகலாதவராக - மற்றுமொரு போருக்கு அழைப்புவிடுப்பவராக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்துகொள்கின்றார்.

விடுதலைப் புலிகள், யுத்தத்திற்குத் தயாராகி வருவதாக - தனது குடும்பத்தவரின் சமாதிகள் நிறைந்த நிட்டம்புவவில் முழங்கியிருக்கும் ஜனாதிபதி-

விடுதலைப் புலிகளின் கப்பலைத் தகர்க்க உத்தரவிட்டதும் தானேயென்றும் அறிவித்திருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதினான்காவது மாநாட்டில் - ஜனாதிபதி கூறியிருக்கும் இக்கருத்துக்கள் - மீண்டும் நாட்டைப் பேரழிவுப் பாதைக்குக் கொண்டுசெல்வதற்கான சமிக்ஞைகளாகவே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் எண்ணெய்த்தாங்கிக் கப்பலை, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து - போர்நிறுத்த விதிமுறைக்கு முரணாகவும், சர்வதேசக் கடற்போக்குவரத்துச் சட்டங்களை மீறியும் கடற்படை தாக்கியழிப்பதற்கு உத்தரவிட்டதன்மூலம்-

விடுதலைப் புலிகளைச் சீண்டியதோடு, கடற்படையினரால் கைதான பன்னிரு போராளிகளின் நிலைமை இதுவரை என்னானது என்பது தெரியாத நிலைக்கு ஆளாக்கியிருக்கும் ஜனாதிபதி -

போருக்குப் புலிகள் தயாராகி வருவதாகச் சொல்வது, திட்டமிட்ட சதிமுயற்சியா என்ற சந்தேகத்தையே கிளப்பியிருக்கிறது.

ஏனெனில் - விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டச் செய்யும் செயல்களையே தொடர்ந்து மேற்கொண்டு வரும் கடற்படையானது, ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப் பாட்டிலும், முழுமையான ஆசீர்வாதத்துடனும் இயங் கிவருகின்ற நிலையில்,

புலிகளைப் பொறுமையிழக்கச் செய்து, மற்றுமொரு போருக்கான ஆரம்பகர்த்தாக்கள் புலிகளே என்ற வரலாற்றுப்பழியைச் சுமத்துவதற்கு - ஜனாதிபதி தீவிரமாகவே முயற்சித்துவருவதை இன்று அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஒருபுறம் சமாதானத்திற்கான தேவைகள் பற்றியும், விடுதலைப் புலிகளுடன்தான் பேசியாக வேண்டும் எனவும் அறிவிப்புக்களை விடுத்துக்கொண்டு, மறுபுறம்- விடுதலைப் புலிகளைச் சீண்டியவாறு, அமைதி முயற்சிகளைச் சீரழிக்க முனையும் போக்குக் கொண்டவராக நடந்துவரும் ஜனாதிபதி சந்திரிகா-

'வீடெரிக்கும் இராசாவுக்கு நெருப்புக்கொடுக்கும் மந்திரியாக' - ஜே.வி.பியையும் துணைக்கழைத்திருப்பது, அவர் மீதான சந்தேகத்தை இன்னமும் வலிதாக்கியிருக்கிறது.

ஏற்கனவே - 1995 இல், விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களின்போது - தமிழ்மக்களை ஏமாற்றும் விதத்தில் செயற்பட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தமிழ்மக்களுக்கெதிராக வார்த்தைகளில் வடிக்கமுடியாதளவு கொடுமையான போரினை மேற்கொண்ட பதிவுகள் இன்னமும் ஆழமாய்ப் பதிந்திருக்க -

மற்றுமொரு யுத்தத்திற்கான முஸ்தீபுகளிலும் அவர் ஆர்வம் காட்டிவருவதை, சர்வதேச சமூகமும் மௌனத்தோடு வேடிக்கை பார்த்திருப்பது வியப்பானதாகவேயுள்ளது.

நிட்டம்புவவில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் - தமிழ் மக்களுக்கெதிரான கொடிய யுத்தத்தில், அரச படைகளின் கதாநாயகனாக விளங்கிய அனுருத்த ரத்வத்தவை, சிறையிலிருந்து விசேட அனுமதியின்பேரில் அழைப்பித்து - மேடையில் தனக்கருகில் முக்கிய இடம் அளித்தது - இன்னமும் 'பழைய போர்க்கூட்டணியின் நினைவுகளிலிருந்து ஜனாதிபதி விலகாமலிருப்பதையே காட்டுகின்றது.

நாட்டையும் மக்களையும் பாதுகாத்தல் என்ற பெயரில் - மற்றுமொரு யுத்தத்தின்மூலம் இலங்கையைச் சுடுகாடாக்குவதற்குத் திட்டமிடும் ஜனாதிபதியும், அவருக்கு ஒத்தூதும் ஜே.வி.பியும்,

சிஹல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி போன்ற அமைப்புக்களும் -

'யானை தன்தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும்' நிலையிலிருப்பவர்களாகவே தோன்றுகின்றனர்.

இந்தவகையில் - பௌத்த சிங்களப் பேரினவாதத்தை உசுப்பேற்றிவிடும் இந்த முயற்சிகள் - இனியும் கட்டுமீறுமானால், அமைதிபற்றிப் பேசுவதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தையும் அது இல்லாதொழித்துவிடும் என்பது மட்டும் திண்ணமாகும்.

# 'பொங்கு தமிழ்' வெற்றியைக் காண பொது அமைப்புக்கள் அறைகூவல்!

எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் அணிதிரளுமாறு பல்வேறு பொது அமைப்புக்களும் பொதுமக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளனர்.

**கனடா - தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள் மற்றும் தமிழ்த் தேசிய அமைப்பு**

பல்லாயிரம் ஆண்டு காலமாய் அடிமைப்பட்டுக்கிடந்த எம் இனம் - இன்று சுதந்திரதேவியின் வருகைக்காய், வழி மேல் விழிவைத்துக் காத்திருக்கின்றது.

இவ்வுலகமே எம் இனத்தின் துன்பங்களை வேடிக்கை பார்த்தபோது - அவர்களின் துன்பங்களையும், அபிலாஷைகளையும், எதிரியின் முற்றுகைக்குள்ளேயிருந்தும், வெளி உலகிற்குத் தெரியப்படுத்தியவர்கள் நீங்கள்.

இந்தப் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் - நாமும் பங்கேற்க முடியவில்லை என்கின்ற கவலை எமக்கிருந்தாலும், எம் உணர்வும், ஆதரவும் உங்களுக்கு எப்போதும் உண்டு என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம்.

எம் இனத்தின் அடையாளத்தையும், மக்களின் பிரதிநிதிகளையும், தேசத்தின் தலைமையையும், இந்த உலகமே திரண்டு நின்று புறக்கணித்தாலும், மாணவசக்தியான நீங்களும், புலம்பெயர்ந்த நாங்களும் - அவர்களுக்காக இருக்கும்வரை, எம் இனத்தை யாராலும் அசைக்கமுடியாது என்பதனை இதன்மூலம் உறுதிப்படுத்துகிறோம்.

தடைகள் பல வந்தாலும், உங்கள் 'பொங்கு தமிழ்' இனிதே நடக்கட்டும். அதனை இந்த உலகமே மீண்டும் ஒருமுறை தன் கண்ணைத் திறந்து பார்க்கட்டும்.

நாம் இங்கே தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டோம் என்று, நீங்கள் கவலைகொள்ளதேவையில்லை. ஒரு தாயின் பாலைக்குடித்து வளந்தவர்கள் - எல்லோரும் தேசத்தின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்றார்கள்.

எங்களின் ஆதரவு இருக்கும்வரை, யாரும் விலை பேசிட முடியாத தலைமை இருக்கும்வரை, எதையும் துணிந்து நின்று முன்னே செல்லும் நீங்கள் இருக்கும்வரை - யாரும் எம்மை இனிமேலும் அடக்கிடமுடியாது. இந்தப் 'பொங்கு தமிழ' ஒழுங்கே அமைந்து, பின் அதுவே உலகநாடுகளில் பரவி எம் இனத்தின் அபிலாஷைகளைக் கட்டியம்கூறிட வாழ்த்துகிறோம்.

**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசம்**

உலகில் இன ரீதியாக அடக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, மறுக்கப்பட்ட இனங்கள் - தமது உரிமைக்கான போராட்டங்களில் ஈடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றுள்ளன. அந்த நாடுகளில் நடைபெற்ற உரிமைக்கான போராட்டத்தில், அந்த இனத்தைச் சார்ந்த அனைத்து மக்களும் தமது உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பாகத் தமக்குள் கலந்துரையாடி, தெளிவடைந்த நிலையில் - அவர்கள் ஒற்றுமையாக ஓரணியில் நின்றதன்மூலம், தமது உரிமைகளை வென்றெடுக்க முடிந்துள்ளது. அதுவே உலக வரலாறாகும்.

இதுபோன்றுதான், கடந்த இருபதாண்டு காலமாகப் பேசாமடந்தைகளாக இருந்த தமிழ் மக்கள் - கடந்த 2001 ஆம் ஆண்டு தமது உரிமைகள் பற்றித் தமக்குள் கலந்துரையாடி, அது பற்றித் தெளிவடைந்த நிலையில் - 2001 ஆம் ஆண்டு தை 17 இல் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒற்றுமையாக, ஒன்றுதிரண்டு தமது விருப்பங்களை வெளிப்படுத்தியதன்மூலம், சர்வதேச சமூகத்திற்கு எமது மறைக்கப்பட்ட பிரச்சினைகள், மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றித் தெளிவுபடுத்தி, அவர்களது ஆதரவைப் பெறமுடிந்தது.

அதன்மூலம், எமது பிரதேசத்தில் நடைபெற்ற யுத்தத்தினை நிறுத்தி - உயிரிழப்புக்கள், சொத்து அழிவுகளையும் தடுத்து நிறுத்தி, இரத்த ஆறு ஓடுவதையும் நிறுத்தி, சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடியளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, ஆறு கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையிலும், மக்களது வாழ்வில் இயல்புநிலை தோன்றவில்லை. இதற்குக் காரணம் - மக்களது வீடுகள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், கோவில்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் இராணுவம் நிலைகொண்டிருப்பதாகும்.

இந்த இராணுவம் - தமிழ் மக்களது பாதுகாப்பிற்காகவே இந்த இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினரை மக்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றுவது, மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமெனவும், உண்மைக்குப் புறம்பான ஓர் மாயையை உருவாக்கி அதனைச் சர்வதேச சமூகத்திற்கு அரசு கூறிவருகிறது. இந்த உண்மைக்குப் புறம்பான அரசின் பொய்யான தகவலை, சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இந்நிலையில், மக்கள் கடந்த ஒருவருட காலமாக மௌனமாக இருந்து வருவதனால், சர்வசே சமூகம் அரசின் கருத்துக்களை ஏற்றது போலவும், அரசிற்கு எவ்வித அழுத்தங்களையும் கொடுக்காது மௌனமாக இருந்து வருகின்றது. இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு, எமது கருத்துக்களை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோமாயின் - சர்வதேச ஆதரவைப் பெறுவதன்மூலம் எமது அன்றாட, அடிப்படையான பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்காக அனைத்து மக்களும் - தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக இந்தமாதம் 27 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடுசெய்துள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வில் ஒன்று கூடுவோம். எமது கருத்துக்களை, ஆசைகளை சர்வதேச சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும் உரத்து கூறுவோம்.

இதன்மூலம் - மீண்டும் ஒரு யுத்தமின்றி, ஒரு துளி இரத்தம் சிந்தாது, உயிரிழப்புகளின்றி, எமது வாழ்விடங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கும், எமது பறிக்கப்பட்ட- மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்குமாக, இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஓர் நாளில் - ஓர் அணியில் ஒன்று கூடுவோம். உரிமைகளை வென்றெடுப்போம்.

# தில்லைச் சிவனின் 'காவல் வேலி' சிறுகதைத்தொகுதி அறிமுக விழா!

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டுள்ள தில்லைச் சிவனின் "காவல் வேலி" சிறுகதை தொகுதி நூல் அறிமுகவிழா, அடுத்தமாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையை சட்டத்தரணி சோ.தேவராசாவும், சிறப்புரையை கலாநிதி க.சொக்கலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து தில்லைச் சிவன் கதைகள் காட்டும் நூல் நயம் கூறல் இடம்பெறவுள்ளது. இதன் சமூகப் பார்வை பற்றி கலாநிதி எஸ். சிவலிங்கராசாவும், கதாமாந்தர் பற்றி விரிவுரையாளர் இ.குமரனும், மொழியாட்சி பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸும், கதை நிகழ்களங்கள் தொடர்பாக எழுத்தாளர் க.சட்டநாதனும், கதைகளின் உணர்வுத் தெறிப்புகள் தொடர்பாக கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் நயப்புரை ஆற்றவுள்ளனர்.

# ஒருமைப்பாட்டை வலியுறுத்தவே யாழ்ப்பாணத்துக்குச் செல்கிறேன்!

*அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு*

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களும் தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களும் ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தவே தாம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லவிருப்பதாக அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்தர நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றம் எதிர்வரும் 28ம், 29ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்திரகித்தர நாயக்க தேரர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவருடன் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு பௌத்தபிக்குகளும் யாழ்ப்பாணத்துக்கு வரத்திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அஸ்கிரிய பீடாதிபதி விமானமூலமாகவும், ஏனைய பௌத்த பிக்குகளை தரை மார்க்கமாக பஸ்களிலும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது யாழ்ப்பாண விஜயம் குறித்து செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அஸ்கிரிய பீடாதிபதி புத்தரகித்தர நாயக்க தேரோ மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் - இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வுகாண அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

சில தரப்பினருக்கு குறைபாடுகள் அதிருப்திகள் இருக்கலாம். அது குறித்துக் கலந்துரையாடல் நடத்தித் தீர்வுகளைக் காணவேண்டும். இதன் மூலமே அனைத்து மக்களுக்கும் சுபீட்சமான வாழ்வு கிடைக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலை - தமிழ் மக்களின் காணிப்பிரச்சினைகள்; அமைச்சர் ராஜித சேனாரத்ன -திலக்குடன் பேச்சு!

(திருகோணமலை)

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குடன் - காணிப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

கடந்தவாரம் திருகோணமலையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களை, மீளவும் குடியமர்த்துவது தொடர்பாகவே - இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ராஜித சேனாரத்னவும், திலக்கும் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இடம்பெயர்ந்த மக்களை மீளவும் சொந்த இடங்களில் குடியமர்த்தும் திட்டத்துக்கமைய, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களுக்கு - குடியிருப்பதற்கான காணிகளை வழங்குவது பற்றியும், இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துதல் போன்ற விடயங்கள் குறித்து, தொடர்ந்தும் புலிகளின் திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குடன் பேச்சுக்களை நடத்துவதற்கும் அமைச்சர் ராஜித சேனாரத்ன முடிவுசெய்துள்ளார்.

அடுத்த சந்திப்பு, திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்!



தென்மாகாண அமைச்சர் 'சண்டி மல்லி', சில வாரங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்துக்குள், பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு அருகில் பட்டப்பகலில் இக்கொலை நடந்தது.

இதைக் கேட்டதுமே ஜனாதிபதி கொதித்தெழுந்தார். பொறுமையின் எல்லைக்கே தான் சென்றுவிட்டதாகக் கூறினார். ரணில் ஆட்சியை கடுமையாகச் சாடினார்.

சென்றவாரம் - மேல்மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் துடித்தெழுந்தனர், ரணில் அரசைக் கண்டித்தனர். உள்நாட்டமைச்சர், பதவி விலக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்தனர். இந்தக் கொலைகளைக் கண்டித்து, எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் - மககள் விடுதலை முன்னணியினருடன் சேர்ந்து நாடாளுமன்றத்தினுள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவர்கள், நாடாளுமன்றத்தினுள் சவப்பெட்டி ஒன்றைக் கொண்டுவந்து, உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் ஆசனத்தின் முன்வைத்து ஒப்பாரி செய்து செத்தவீடு கொண்டாடினர்.

தெற்கு, மேற்கு மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டதற்கு, நாடாளுமன்றத்தினுள் சவப்பெட்டி கொண்டுவந்து அட்டகாசம் செய்த எதிர்க்கட்சியினருக்கு, அமைச்சர் தி.மகேஸ்வரன் நல்ல பதிலளித்தார். "இநத இருவரும் பாதாள உலகக் கோஷ்டியை சேர்ந்தவர்கள். அந்த கோஷ்டியினர்தான் அவர்களைக் கொலை செய்திருக்கிறார்கள்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில், ஆயிரம் ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அப்போது அவர்களுக்காக ஆயிரக்கணக்கில் சவப்பெட்டிகளை சபைக்கு கொண்டுவந்து நாங்கள் அழுதிருக்க வேண்டும் என்றும் மகேஸ்வரன் கூறினார்.

ஈழத் தமிழ்மக்களுக்காக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குரல்கொடுத்த குமார் பொன்னம்பலம், கொழும்பில் - பட்டப்பகலில் நயவஞ்சகமாகச் சுட்டுக்கொல்லப்பட்டார். குமாரின் கொலையைக் கேட்டு ஜனாதிபதி துடித்தெழவில்லை. அன்று ஆளும்கட்சியில் இருந்தவர்களும் குமாரின் கொலையைப்பற்றிப் பேசவில்லை. இன்றுவரை குமாரின் கொலையாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை. இதுபற்றி எவரும் குரல் எழுப்பவும் இல்லை. அந்தக் கொலை மூடிமறைக்கப்பட்டுவிட்டதா?

யாழ்ப்பாணத்தில், ஊடகவியலாளர் நிமலராஜன் - வீட்டில் வைத்தே படுகொலை செய்யப்பட்டார். தாயும், தந்தையும், மனைவியும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். யாழ்ப்பாண மக்களைப் பாதுகாப்பதற்கென்று கூறி, இன்னும் அங்கு முகாமிட்டுள்ள இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு முகாம்களுக்கு அருகில்தான் நிமலராஜன் கொலை செய்யப்பட்டார்.

அப்போது ஆளும்கட்சியைச் சார்ந்த இன்றைய எதிர்க்கட்சியினர், இதைக் கண்டிக்க முன்வரவில்லை. இந்தக் கொலையாளிகளைக் கண்டுபிடித்து கைதுசெய்வதற்குக் கூட பல தடங்கல்கள் - நிமலராஜன் கொலையாளிகள் மீது வழக்குப் போடுவதற்கும் இடையூறுகள்.

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில், தேர்தல் பிரசாரத்திற்கு, தீவுப்பகுதிக்குச் சென்ற தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் தீவுப்பகுதியில் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலின் விளைவாக, இரு அப்பாவி உயிர்கள் பலியாகின. இத்தாக்குதல் நடந்தசெய்தி வெளிவந்ததும் - மீன்வியாபாரிகளும், பெண்களும்தான் தாக்கினார்கள் என்று அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கிழக்கில், சிகரட் வாங்கிக்கொண்டு வருவதற்குத் தாமதித்தற்காக, ஒரு அப்பாவி - இராணுவத்தினருடன் இணைந்து இயங்கும், இயக்கம் ஒன்றைச் சேர்ந்த சிலரால் அடித்தே கொல்லப்பட்டார். இவை ஒன்றிரண்டு சம்பவங்கள்.ஒரு இளைஞனைத் துரத்திச் சென்று சுட்டு அவனின் தலையைத் துண்டித்து பொலித்தீன் பையில் கொண்டுசென்ற காட்சியும் மட்டக்களப்புப் பகுதியில்தான் கண்டதுண்டு.

வடக்கிலும் கிழக்கிலும் நடந்த கோரக் கொலைகள் எத்தனை? குமார் பொன்னம்பலம் இக்கொலைகள் சிலவற்றை நீதிமன்றத்தில் வாதாடியதன் மூலம், வெளிஉலகம் தெரிந்து கொள்ள வழிசெய்தார்.

அப்பொழுதெல்லாம் - ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களோ இக்கொலைகளைக் கண்டிக்க முன்வரவில்லை. இதுபோன்ற படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் தேசியவீரர்களாக, பேரினவாதிகளால் போற்றப்பட்டனர். படுகொலைக்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

இத்தகைய படைவீரர்களுக்குதான், ரோக்கியோ மாநாடு மூலம் கிடைக்கும் உதவிப் பணத்தில் உதவவேண்டும் என்று சமீபத்தில் ஜனாதிபதி சந்திரிகா யோசனை தெரிவித்திருந்தார். அதிக படிப்பும் தேவையில்லை. குடும்பப் பாரம்பரியமும் அவசியம் இல்லை. துப்பாக்கி பிடித்துச் சுடுவதற்குத் தைரியம் இருந்தால் படைகளில் சேரலாம் என்று சேர்க்கப்பட்டவர்கள்தான், இன்று ஆயுதங்களுடன் ஒடுகாலிகளாகி, பாதாள உலகக்கோஷ்டிகளுக்குப் பலம் சேர்த்துக்கொண்டிருப்பவர்கள்.

வவுனியாவில் இருந்து ஆனையிறவுவரையும், கிழக்கிலும் - சிறைசென்ற கடும் குற்றவாளிகளுக்கு ஆயுதம் கொடுத்து குடியேற்றப் போவதாகச் சொன்ன அத்துலத் முதலி, கிழக்குக் கரையோரக் கிராமங்களில் இதைநிறைவேற்றவும் செய்தார். வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் படையினர், எங்கே சுட்டாலும் கொல்லப்படுவது தமிழன் என்பதால், அதிக பயிற்சிகூடத் தேவைப்பட்டதில்லை. படைக்குத் தெரிவுசெய்வதற்கு தரம் தேவையில்லை. எத்தனை ஆயுதங்களையும், எத்தனை தோட்டாக்களையும் கணக்கு வழக்கின்றிச் செலவு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது. அன்று, தமிழனுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அத்திவாரமற்ற அவசரப்படை - இன்று, உருவாக்கியவர்கள் மீதே பதம் பார்க்கத் தொடங்கியிருக்கிறது.

படைகளிலிருந்து தப்பி ஓடியவர்கள், நவீன ஆயுதங்களுடன்தான் சென்றனர். இப்படி ஓடியவர்களின் தொகை, அறுபதாயிரத்திற்கும் அதிகம் என்று சமீபத்தில் ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.


**எஸ்.எம்.ஜீ.**

ஒடுகாலிகளைக்கூடப் பிடிக்கமுடியாத படையினரும் பொலிஸூம், எப்படிப் பொதுமக்களுக்கு பாதுகாப்பளிக்க முடியும்? தமிழ் மக்களை அழிதொழிப்பதற்காகத் திரட்டப்பட்ட படை - இப்பொழுது உருவாக்கியவர்களுக்கே ஆபத்தாக உருப்பெற்றிருக்கிறது. "தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" எனறு சொன்ன பட்டிணத்தடிகள், "முன்னையிட்டதீ முப்புரத்திலே, பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்" என்றும் பாடியிருக்கிறார்.

# 'ஒரு கிராமம் – ஒரு உற்பத்தி' என்ற மிலிந்தவின் திட்டம் சாத்தியமானதா?

'One Village - One Product' (ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி). இது இன்றைய ஆசியப் பொருளாதாரத்தில் மிக முக்கியமானதாக விளங்கும் ஒரு கோட்பாடாகும். இந்த உற்பத்தி முறையானது, ஜப்பானிலும் தாய்லாந்திலும் பெருவெற்றி பெற்றுள்ளது.

இதே முறைமையை இலங்கையிலும் அறி



முகப்படுத்தவுள்ளதாக, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1977 ஆம் ஆண்டு, திறந்த பொருளாதாரம் (Open Economy) என்ற உற்பத்தி மறுபங்கீட்டு முறைமையை, ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் அறிமுகப்படுத்தியது.

எனினும், அதன் உள்ளார்ந்த கட்டமைப்பையும், ஏனைய வளர்ச்சியையும் இலங்கை பெற்றதா என்பது கேள்விக்குறியே.

1994 ஆம் ஆண்டு, பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தபோதும், ஏற்கனவே அறிமுகமாகியிருந்த திறந்த பொருளாதாரக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவர முடியவில்லை.

பொதுவாக, சில பழக்கவழக்கங்கள் மக்கள் மத்தியில் நீண்ட காலம் பேணப்பட்டு வந்தால், பின்னர் - அதுவே ஒரு சட்டமாகவும், நடைமுறையாகவும் மாறிவிடுவதுண்டு. இவ்வாறான ஒரு நிலையே இலங்கையிலும் ஏற்பட்டுவிட்டது.

அதாவது, திறந்த பொருளாதாரக் கொள்கையில்லாமல் இனிச் சீவிக்க முடியாது என்ற நிலையே அது.

இலங்கையைப் பொறுத்தவரை - விவசாயம், மீன்பிடி ஆகிய இரு துறைகளே உற்பத்திக்கான மூலகமாகக் காணப்படுகின்றன. எனவே, இவ்விரு துறைசார்ந்த கைத்தொழில் முயற்சிகளில் கருத்துச் செலுத்துவது மட்டும்தான் நீண்டகாலத்தில் பயனளிக்கத்தக்கது.

ஆனால், இதுவரை நடைமுறையிலுள்ள உற்பத்தி முயற்சிகள் அவ்வாறு திட்டமிடப்படவில்லை.

இலங்கையில், குறைந்த சம்பளத்திற்கு இளைஞர்களையும், யுவதிகளையும் வேலைக்கமர்த்த முடியும் என்ற எண்ணத்தில் மட்டுமே பல முதலீடுகள் திட்டமிடப்பட்டன. மூலப்பொருட்களையும், இயந்திரங்களையும் வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, இலங்கையில் கிடைக்கக்கூடிய சக்தி வளங்களையும், மனித வளங்களையும் தமக்குச் சாதகமான முறையில், பல பல்தேசியக் கம்பனிகள் (Multi National Companies) பயன்படுத்திக் கொண்டன.

1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு, இலங்கையில் நிலவிய வேலையில்லாப் பிரச்சினையை, உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என நினைத்ததால் - உற்பத்தி முயற்சிகளைப் பற்றியோ, ஊழியச்சுரண்டல் பற்றியோ கவனத்தில் கொளளவில்லை.

இவ்வாறு கருத்திற் கொள்ளாமல் ஏற்படுத்தப்பட்ட முதலீட்டு முயற்சிகளாக - கட்டுநாயக்கா, பியகம பகுதிகளில் உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்களையும், வட - கிழக்குத் தவிர்ந்த (மட்டக்களப்பில் ஒரு ஆடைத்தொழிற்சாலை மட்டும் உண்டு), இலங்கையின் ஏனைய பாகங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆடைகள் தைக்கும் தொழிற்சாலைகளையும் (Gaments) குறிப்பிடமுடியும்.

ஆனால், இத்தகைய நடைமுறையால், இலங்கையில் உள்ள மூலவளங்கள் வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்ல வாய்ப்பேற்படவில்லை.

இலங்கையில், தொழிலாளர் சட்டங்கள் (Labour Law) - இறுக்கமானதாக இல்லாததால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் துணிந்து முதலீடு செய்யும் வாய்ப்பு இருக்கின்றது.

உதாரணமாக - தொழிலாளர் சட்டங்கள் இறுக்கமானதாக இருப்பின், ஒரு தொழிலாளி இறந்தால் அல்லது வேலையின்போது விபத்துக்குள்ளானால் பெருந்தொகையான பணத்தினை நஷ்டஈடாக வழங்க வேண்டியிருக்கும். ஆனால் - இலங்கையில் இன்றுள்ள நிலைமையில், ஒருவர் இறந்தால் - மரணச்சடங்கிற்கான செலவும், விபத்துக்குள்ளானால்- ஏதோ மனமுவந்து கைக்குள் வைக்கும் ஐந்தோ பத்தோ என அலுவல் முடிந்துவிடும்.

வேலையற்றோரின் தொகை வருடாவருடம் அதிகரித்துச் செல்லும் நிலையிலிருப்பதால், தொழில் தேடுபவரும் - தொழில் வழங்குநரிடம் பெரிதாக எதனையும் எதிர்பார்ப்பதில்லை. அதற்கு அவகாசமும் இல்லை. ஏதோ தொழில் ஒன்று கிடைத்தாலே போதும் என்ற நிலையே காணப்படுகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், உள்நாட்டில் மக்களின் தேவைக்காகப் பயன்படுத்தக்கூட மின்சாரம் போதாமல் இருந்தபோதிலும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொழிற்சாலைகளுக்குப் போதியளவு மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

இதற்கு இன்னோர் காரணமும் சொல்லப்படுகிறது. முன்னாள் மின்சக்தி அமைச்சராக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்த - வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் பல மில்லியன் ரூபாக்களை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கியதால், பொதுமக்களின் நுகர்வுக்கான மின்சாரத்தில் பஞ்சம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர்- திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஊடாக, வடக்கு - கிழக்கில் பாரிய தொழிற்சாலைகள் எதுவும் நிறுவப்படவில்லை. மாறாக, யுத்தச் சூழலைக் காரணம் காட்டி, ஏற்கனவே செயற்பட்டு வந்த - பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, மஸ்கன் சீற் உற்பத்தித் தொழிற்சாலை மற்றும் பல அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலைகள், ரயர் உற்பத்தித் தொழிற்சாலைகள், கண்ணாடித்தொழிற்சாலை, றால் பதனிடும் தொழிற்சாலை, ஜாம் உற்பத்தித் தொழிற்சாலை போன்ற பலவும் மூடப்பட்டன.

உதாரணமாக - சீமெந்துத் தொழிற்சாலை இயங்கமுடியாத நிலை ஏற்பட்டதன் பின், அங்கு பணியாற்றியவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டதுடன் சீமெந்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கட்டடவேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர், இரும்புவேலை செய்



வோர் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் என பல்வேறுபட்ட தொழில்புரிவோர் தமது தொழிலை இழக்கவேண்டியதாயிற்று.

இது, தென்பகுதியின் அபிவிருத்தியுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்னடைவான நிலையிலேயே உள்ளது. இந்நிலை, ஒரு வருடத்திற்குமேல் நிலவிவருகின்ற சமாதானச் சூழலிற்கூட, நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளது.

**விஜயன்**

இவவாறான ஒரு சூழலில் மிலிந்த மொறகொட குறிப்பிடுகின்ற 'ஒரு கிராமம் - ஓர் உற்பத்தி' என்ற கோட்பாடு எதைச் சாதிக்கப் போகிறது?

இத்திட்டத்தின் மூலம், இதுவரை நாட்டில் நிலவிவருகின்ற திறந்த பொருளாதாரச் சூழலைவிட, மிகவும் பாதிப்பான ஒரு நிலை நீண்டகாலத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு கிராமத்துக்குள் காணப்படுகின்ற மூலப்பொருட்களை வைத்து, ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றபோது - அங்குள்ள மூலப் பொருட்கள் அழிந்துவிடவும், மிகக்குறைந்த விலையில் அந்நிய முதலீட்டாளர்களால் அது கைப்பற்றப்பட்டுவிடவுமே வாய்ப்புண்டு.

அதேவேளை, அந்தக் கிராமத்து இளை

(09 ஆம் பக்கம் பார்க்க)

# மேற்கு ஈராக்கில் ஏவுகணை வீச்சு; சதாம் ஹுசைன் கொல்லப்பட்டாரா?

## அமெரிக்கப் படை வட்டாரங்களில் பரபரப்புத் தகவல்



மகனுடன் சதாம்

ஈராக்கின் மேற்குப் பகுதியில், சிரியாவின் எல்லைக்கருகே, இனந்தெரியாத வாகனத் தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் - ஈராக்கின் முனனாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அல்லது அவரது மகன்மாரான உதய், குவாசி ஆகியோரில் ஒருவராவது கொல்லப்பட்டிருக்கலாமென, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி உறுதியாகச் சொல்லமுடியாதபோதும் - தாக்குதல் நடந்த இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் நடத்தப்படவுள்ள டி.என்.ஏ. பரிசோதனைகளின் மூலம் - இவர்களில் எவராவது உயிரிழந்தனரா என்பது தெளிவாகத் தெரிந்துவிடும் என, வொஷிங்ரனிலுள்ள அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க அரசின் பாதுகாப்பு நிறுவனமான பென்ரகனும் - இச்சம்பவம் பற்றி உத்தியோகபூர்வமாகக் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது.

அமெரிக்க செனட்டின் புலனாய்வுப் பணிக்குழுவில் இடம்பெறும் ஜே ரொக்.ஃ.பெல்லர் கூறுகையில் - "நாம் புள்ளிகளைச் சம்பாதித்துவிட்டோம். ஆனால், எமக்கு அது தெரியாமலிருக்கிறது' என்றார்.


கடந்தவாரம் நடந்த இத்தாக்குதலில், ஆளற்ற அமெரிக்க விமானமொன்றிலிருந்து 'ஹெல்.ஃ.பயர்' (Hellfire) ஏவுகணைகள் வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - சதாமின் மிக நெருக்கத்திற்குரியவராக இருந்து, அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்ட மஹ்மூட் அல் திக்கிரித்தி கொடுத்த தகவல்களின் அடிப்படையில் இத்தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகின்றது.

சதாம் ஹுசைன் உயிருடனிருப்பதைப் பற்றி உறுதிப்படுத்தும் திக்கிரித்தி -

சதாமையும் அவரது இரு மகன்மாரையும் சிரியாவில் விடச் சென்றபோது தானும் கூடப்போனதாகவும், பின்னர் - சதாமை அங்குவிட்டுவிட்டு, மகன்கள் இருவரும் ஈராக்கிற்கு மீளத்திரும்பி விட்டதாகவும் கூறியிருக்கிறார்.

# தண்டவாளத்திலிருந்து ரயில் விலகியது; இந்தியாவில் 23 பேர் பலியாகினர்



இந்தியாவின் மேற்குப் பகுதியில், ரயிலொன்று தண்டவாளத்திலிருந்து விலகி விபத்துக்குள்ளானதில், கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஞாயிறன்று - மும்பாய் நகரிலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவில், ராஜ்பூர் பகுதியில்- கடும் மழை காரணமாக - தண்டவாளத்திலிருந்து ரயிலொன்று விலகிச் சரிந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள், அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதாக, இந்திய ரயில்வேயின் பேச்சாளர், நந்து ரெலாங் கூறினார்.

விபத்தில் பலியானவர்கள், பதிவு

உலகவலம்

செய்யப்படாது பயணித்தவர்கள் என்பதால் - அவர்கள் யாரென அடையாளம் காண்பது கடினமாயிருப்பதாக, ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

கர்நாடகாவிலிருந்து மும்பைக்குச சென்றுகொண்டிருந்த இந்த ரயில், விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து- அப்பகுதியால் செல்லும் அனைத்து ரயில் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

# ஹொங்ஹொங்கில் 'சார்ஸ்' இல்லை; அந்நாட்டரசு அதிகாரபூர்வ அறிவிப்பு!

## ஆனாலும் ரொரன்ரோவில் பீதி குறையவில்லை



தனது பிரதேசம் எதிலும் 'சார்ஸ்' நோய் இல்லையென, ஹொங்கொங் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

'சார்ஸ்' நோய் பாதித்தவரென, கடந்த 20 நாள்களுக்கு முன்னர் ஒருவர் இனங்காணப்பட்டதற்குப் பின்னர், இந்த அறிவிப்பு நேற்று வெளியானது.

296 'சார்ஸ்' இறப்புக்களைச் சந்தித்த ஹொங்கொங் - 'சார்ஸ்' நோயைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய முன்னேற்றத்தை அடைந்திருப்பதாக, உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளது.

தற்போது, முழு உலகமும் 'சார்ஸ்' அச்சுறுத்தலிலிருந்து விடுவிக்கப் பட்டுவிட்டதாக, உலக சுகாதார ஸ்தாபனத்தின் சமூக நோய்கள் பிரிவின் பணிப்பாளர் டேவிட் ஹேமன் கூறியுள்ளார்.

ஆனாலும் - கனடாவின் முக்கிய நகரான ரொரான்ரோவில், நிமோனியா வகையைச் சேர்ந்த தொற்று நோயின் தாக்கம் இன்னமும் குறையாததால், ஒரேயடியாக நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாதென, சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஞாயிறன்றும் கூட, இரண்டு பேர் ரொரானரோவில் 'சார்ஸ்' நோயால் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 680 தொன் வெடிபொருளுடன் கிரீஸ் கடலில் மர்மக்கப்பல்!

கிரீஸ் நாட்டு கடலினூடாக ஆபிரிக்கா நோக்கிச் சென்றுகொண்டிருந்த கப்பலொன்று, 680 தொன் வெடி மருந்துகளுடன் பிடிபட்டுள்ளது.

'அமோனியா டைனமைற்' என்ற இந்த வெடிபொருளை ஏற்றிவந்த கப்பலை - கிரீஸின் பயங்கரவாத எதிர்ப்புப் படையினரும், இராணுவ வெடிகுண்டுகள் செயலிழக்க வைக்கும் பிரிவினரும் இணைந்து சோதனையிட்டு வருகின்றனர்.

தாங்கள் உக்ரேனிலும், அசர்பைஜானிலும் இந்த வெடிபொருள்களை ஏற்றியதாக, கப்பலின் பணியாளர்கள் தெரிவித்தனர்.

'போல்டிக் ஸ்கை' என்ற பெயருடைய இந்தக் கப்பலில் வெடிபொருளகள் ஏற்றப்பட்டதாக, சர்வதேச புலனாய்வுச் சேவையொன்றின் மூலம் கிடைத்த தகவலொன்றையடுத்தே- கப்பலை கிரீஸ் நாட்டுக் கொமாண்டோக்கள் வழிமறித்தனர்.


அநேகமாக, இக்கப்பல் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள துறைமுகமொன்றிற்குச் சென்றுகொண்டிருந்ததாகத் தெரியவருவதாக - கிரீஸ் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்தளவு அதிகமான வெடி பொருள்கள் எவருக்கு எடுத்துச்செல்லப்பட்டது என்ற சந்தேகம் கிளம்பினாலும், கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள சுரங்கத் தொழிலுக்காக இவை கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் எனவும் இன்னொரு தகவல் தெரிவித்தது.

அடுத்த ஆண்டு கிரீஸில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்காக - தனது கரையோரப் பாதுகாப்பை அந்நாடு பலப்படுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத குடியேற்றக்காரர்கள், கடல்வழியே உள்நுழைவதைத் தடுக்கவும், கிரீஸ் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ளது.

## படமும் செய்தியும்



சீனா சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயை மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கிறாள் ஒரு சிறுமி. அருகே சீனப்பிரதமர் வென் ஜிபாபாவோ. இந்த விஜயத்தில் - நேற்று பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒன்பது ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.



ஆர்ஜன்ரீனாவின் வடக்கேயுள்ள சான் ஜீவான் பகுதியிலுள்ள வைத்தியசாலையில் ஒரே நேரத்தில் பிறந்த மூன்று பெண் குழந்தைகள் இவர்கள். இவர்களில் இருவர் ஒட்டிப்பிறந்த 'சயாமியர்கள்' என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே இதயம், நுரையீரல் என்பவற்றுடன் மூளைகள், வயிறு என்பன தனித் தனியாகக் கொண்டு இந்தக் குழந்தைகள் பிறந்துள்ளன.



ஹொங்கொங்கில் 'சார்ஸ்' இல்லையென அரசு அறிவித்தாலும் முன்னெச்சரிக்கை இந்தப் பெண்ணுக்குண்டு.

# 'ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி'...

ஞர் யுவதிகளைக் கொண்டே, தமக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்துவிடவும் முடிகிறது. இது, ஊழியச் சுரண்டலையும், மூல வளச்சுரண்டலையும் சமகாலத்தில் ஏற்படுத்த வாய்ப்புண்டு.

இத்திட்டத்தின் கீழ், வட-கிழக்கு மக்களுக்கு எத்தகைய லாபம் ஏற்படப்போகிறது? ஸ்திரமற்ற அரசியற் சூழல் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், வெளி முதலீட்டாளர்களைக் கவரக் கூடிய மாஜாயாலங்ளை அரசு செய்ய வேண்டியுள்ளது.

அதிலும், உற்பத்தி செய்யப்படப் போகின்ற பொருட்களுக்கு உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்கள் இருக்கப் போவதில்லை.

1977 இல், திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகம்செய்த பின்பும் கூட, தென்பகுதி யுவதிகளுக்கு - ஆடைத் தொழிற்சாலைகளும், இளைஞர்களுக்கு - இராணுவத்தில் சேருவதும்தான் தீர்வாக இருந்தது. இனியும் அதேநிலைதான் இருக்கப்போகிறது.

ஆனால், உள்ளூருக்குள் இருக்கின்ற ஏதோ ஒரு பெறுமதிமிக்க மூலப்பொருளும் இல்லாமற் போய் விட வாய்ப்புண்டு. நீண்ட காலத்தில், ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஊர்கள் - மூலப பொருளும், உழைபபும் இன்றி கஷடப்படவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வுற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகள், வெளிநாடுகளை நோக்கியதாக இருப்பதால், இலங்கை மக்கள் பெருமளவு நன்மையை அடைந்து விடமுடியாது.

ரோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதியுதவியைப் பயன்படுத்த ஒரு கவர்ச்சிகரமான அணுகுமுறை ரணிலின் அரசுக்குக் கிடைத்துள்ளது என்பதை விட, இதில் மேலதிகமாகச் சாதிப்பதற்கு எதுவும் இல்லை.

வெளிநாட்டு நிதி உதவிகளும், ஆலோசனைகளும் எமது நாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கப்போவதில்லை. இது சமகாலத்தில், "வயிறு கழுவும்" ஒரு நிவாரணமாக மட்டுமே இருக்க முடியும். ★

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திடீர் வீதிச் சோதனைகள் யாழ். நகரில் அதிகரிப்பு!

## ஃபீல்ட்பைக் படையினரின் ரோந்தும் தீவிரம்

யாழ்.நகரப் பகுதி உட்பட யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவத்தினரதும், பொலிஸாரினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் வழமைக்கு மாறாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்.நகரின் முக்கிய சந்திகள் மற்றும் கேந்திர நிலையங்களிலும் இராணுவத்தினர் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு வீதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் படையினர் - வீதியில் செல்லும் மக்களைத் திடீர் திடீரெனச் சோதனைக்குட்படுத்தியும் வருகின்றனர்.

யாழ். நகரைவிட, குடாநாட்டின் புறநகர்ப் பகுதிகளிலும் இராணுவத்தினரது பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. பிரதான வீதிகளில் திடீரெனக் காவல் நிலையங்களை அமைக்கும் படையினர், அவ்வீதிகள் வழியாகச் செல்லும் பொதுமக்களைச் சோதனைக்குட்படுத்தி வருகின்றனர்.

சில இடங்களில் உடற்சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட, இராணுவத்தினரது விசேட மோட்டார் சைக்கிள் அணியினரின் ரோந்துகளும் அதிகமாகியுள்ளன.

இந்த இராணுவ அணியினரது பல குழுக்கள் - குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ரோந்துகளில் ஈடுபட்டுவருகின்றன.

இதனால் மக்கள் மத்தியில் பீதியும், பரபரப்பும் தோன்றியுள்ளது.

# சுவிஸ் இயக்குநர் பங்கேற்கும் திரை விருந்தினர் சந்திப்பு!

## சிற்றி ஹோலில் நாளை நடக்கவிருக்கிறது

யாழ்ப்பாணம் ஸ்கிறிப் நெற் மற்றும் டிஜிற்றல் மீடியா நெற்வேக் ஆகியன இணைந்து நடாத்தும் - திரை விருந்தினர் சந்திப்பு, நாளை முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் சிற்றி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - சர்வதேச திரைப்படக் கல்லூரியின் இலத்தீன் அமெரிக்காவிற்கான விரிவுரையாளரும், சுவிஸ் தேசியத் தொலைக்காட்சி நிலைய விவரணப்பட இயக்குநருமான மறியான் பிளசர், சுவிஸ் தேசியத் தொலைக்காட்சி நிலையப் படப்பிடிப்பாளர் வேனர் செயிடர் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இந்த நிகழ்வில், விவரணப்படம் தயாரித்தல் பற்றிய செய்முறை விளக்கம் வழங்கப்படவுள்ளது.

ஸ்கிறிப் நெற் திரைக்கதை உருவாக்கல் பயிற்சிநெறியில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்கள், திரைப்பட ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு, பயன்பெறலாமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வரதரணி முன்னாள் உறுப்பினர் சம்மாந்துறையில் சுட்டுக்கொலை

(கல்முனை)

ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர்-மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.45 மணியளவில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில், விநாயகர்புரத்தைச் சேர்ந்த கண்ணன் என்று அழைக்கப்படும் பாக்கியராசா குமாரதாசன் (வயது 36) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

வீரமுனையிலுள்ள கடை ஒன்றிற்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை , ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத சிலர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இவர், முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியில் நீண்டகாலமாக உறுப்பினராக இருந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (07)

# பொலிஸ் புலனாய்வு...

என்ற மேற்படி இளைஞன், தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் கொலையுண்ட மேற்படி புலனாய்வுப் பிரிவு அதிகாரியுடன் அவரது அலுவலகத்தில் இருந்து உரையாடிக் கொண்டிருந்ததை, மேற்படி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவதானித்துள்ளார்.

பின்னர் - இந்த அதிகாரி தனது கடமையை முடித்துக்கொண்டு பொலிஸ் விடுதிக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

காலை 10.30 மணியளவில் - இவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த படுக்கையில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து பொலிஸ் விடுதிப் பகுதியில் இருந்து, மேற்படி இளைஞன் ஓட்டோ ஒன்றில் வெளியேறிச் சென்றிருக்கிறார்.

எனினும், இதைக் காவலில் இருந்த பொலிஸார் கவனிக்கவில்லை. இவர், காலி வீதியூடாக சுமார் 500 மீற்றர் தூரம்வரை சென்றபின்னரே நிலைமை தெரியவந்த பொலிஸார் துரத்திச்சென்று, அவ் இளைஞனைக் கைதுசெய்ய முற்பட்டிருக்கின்றனர். அப்போது, அவர் சயனைட் போன்ற பொருள் ஒன்றை வாய்க்குள் திணித்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். பின்னர் இவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட மதன்குமார் என்ற மேற்படி இளைஞன், பல புலனாய்வுத் தகவல்களைக் கொடுத்து- கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவு அதிகாரியின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(200, 01)

TNT கூரியர் சேவையின் முதலாம் வருட நிறைவு

50% விசேட தள்ளுபடி

பொதிவிநியோக சேவையில் TNT இன் முதலாம் வருட நிறைவை முன்னிட்டு சர்வதேச கூரியர்சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை போன்ற சேவைகளுக்கு 50 % சிறப்புத் தள்ளுபடியினை (50% SPECIAL DISCOUNT) வழங்குகின்றோம் என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு எமது புதிய முகவரி:
TNT கூரியர் சேவை
487, ஆஸ்பத்திரி வீதி,
(சிற்றி மெடிக்கல் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2223771 / 0777-270452

உங்கள் அன்பை "பொதியாக" மிகவும் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டிலுள்ள அன்புக்குரியவர்களுக்கு அனுப்பிட அரியதொரு சந்தர்ப்பம்.

இவ்விசேட சலுகை 2003 JUNE 30 வரை மட்டுமே

# 7 தமிழ்...

யில், பொலிஸ் உயரதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே மேற்படி தேடுதல் நடவடிக்கைகளைப் படையினர் முடுக்கிவிட்டுள்ளனர்.

வத்தளை, கெந்தல மற்றும் கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை உட்பட சம்பவம் இடம்பெற்ற தெஹிவளைப் பகுதியிலும் தேடுதல் இடம்பெற்றிருக்கின்றது. வீதியால் சென்ற வாகனங்களும், பயணிகள் பஸ்வண்டிகளும் சோதனையிடப்பட்டிருக்கின்றன. கொச்சிக்கடையில் இடம்பெற்ற தேடுதலில் 7 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகின்றது. பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இத்தேடுதலை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடன்...

ரொனி பிளேயருக்கு எடுத்து விளக்கினார்.

இதன்போது, நீண்டகாலமாகத் தொடரும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு, நிரந்தர அரசியல் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை ரொனி பிளேயர் வலியுறுத்தினார்.

நிரந்தரத் தீர்விற்கு முன்னர், வடக்கு - கிழக்கு மாகாணததில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படுவது நல்லது என்றும், அதன்மூலம் - போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யமுடியும் எனவும் ரொனி பிளேயர் அப்போது கூறினார்.

இடைக்கால நிர்வாகம் அமைக்கும் விடயத்தில் சட்டரீதியான ஆலோசனைகளை, அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் பிரித்தானியா வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் ரொனி பிளேயர் கூறியிருக்கின்றார்.

அதேவேளை - அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும், புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என பிரித்தானியா நம்புவதாகவும் ரொனி பிளேயர் மேலும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை - இலங்கை ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அவசியத்தையும் ரொனி பிளேயர் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ, பிரித்தானியாவில் உள்ள இலங்கை ஊடகவியலாளர்களுக்கு நேற்று விளக்கிக் கூறினார். (200)

DIPLOMA IN PSYCHOLOGY
(POSTAL COURSE)

HSCMF 5 ஆவது பிரிவிற்கான கற்கைநெறிக்கு A/L தரத்திற்கு மேல் கற்றுத்தேறியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது. விண்ணப்பம் செய்வோர் முத்திரையுடன், சுயமுகவரி இடப்பட்டதும், 50/= ஆன காசுக்கட்டளையையும் உடன் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.
DIRECTOR, HSCMF, NAVALY NORTH, MANIPAY.
Clo. Date 14.07.03 (சி-1109)

# உலகின் தொழில்நுட்ப...

இன்று உலகின் பல பாகங்களிலும் மலிந்து கிடக்கும் கணினிகளை, எமது இளம் சந்ததியினர் பெரும்பாலானோர் தமது கண்களால்கூடப் பார்க்கவில்லை.

ஆனால், உலகம் நிறைய மாறி வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மனித வாழ்வில் இரண்டறக் கலந்து, அவனது வாழ்வுக்குச் சிகரமாக' மாற்றங்களை ஏற்படுத்திவருகிறது.

இப்படியான மாற்றங்களுக்கு காரணமான அறிவையும், தொழில்நுட்பங்களையும் தமது இன உறவுகளோடு பகிர்ந்து, தமது உறவுகளையும் தகவல் தொழில்நுட்ப அறிவியல் உலகிற்கு நிகராக வளர்த்தெடுக்கும் முயற்சியாகவே இந்த 'வன்னி ரெக்' நிறுவப்பட்டுள்ளது.

இது - இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியையும், அதன் ஆக்கப்பிரயோகங்களையும் எமது இளம் சந்ததிக்கு வழங்கி எமது தேசநிர்மாணப் பணிக்கு உதவும்.

இப்படியாக அளப்பெரும் தேசநிர்மாணப்பணியில் ஈடுபட்டுள்ள, கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்டு சர்வதேச தமிழ் தொழில்நுட்ப நிபுணர்களது அமைப்புக்கும், அதற்குக் காரணமாக நிதியுதவி அளிக்கும் அமெரிக்கா வாழ் தமிழ் மக்களுக்கும் - தேசியத் தலைவர் சார்பாகவும், எமது மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு - இங்குள்ள பாரிய தேவையை உணர்ந்து 'வன்னி ரெக்'கை நிறுவ நேரடியாக உழைத்தவர்களுக்கும், அதன் நிர்வாகிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இங்குள்ள தமது உறவுகளோடு தமது அறிவாற்றல்களை பகிர்ந்துகொள்ளவுள்ள துறைசார் நிபுணர்களுக்கும், தொழில்நுட்பவியலாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக் கூறியுள்ளார் தமிழ்ச்செல்வன்.

# புலிகளின்...

உதவிவருகிறது. தொடர்ச்சியாக இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை அனுமதிக்கமுடியாது என்பதால்தான், புலிகளின் கப்பலைத் தாக்கியழிக்க உத்தரவிட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளைத் தடைசெய்வதற்கு...

பாதுகாப்பு புலனாய்வு சேவை தெரிவித்திருந்த ஆலோசனையை ஏற்பதற்கு, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் புலனாய்வுச் சேவையின் கோரிக்கைப்படி, இப்போது புலிகளைத் தடைசெய்யத் தேவையில்லை. புலிகள் இப்போது பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். புலிகளை இப்போது தடைசெய்தால், கனேடிய வெளிவிவகார அமைச்சின் கருத்திலிருந்து தவறான செய்தியைச் சொல்வதாகிவிடும். எனவே, புலிகளைத் தடை செய்வது உகந்ததல்ல என்று வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹாம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கனேடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இதுபற்றிக் கருத்து வெளியிட்டபோது-

புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரேரித்தால் - அவ் அமைப்பின் தலைவர்கள் - வெளிநாடுகளில் பேச்சு நடத்துவதற்கு அது குந்தகமாக அமையும். இது, அமைதி முயற்சிகளுக்கு எதிர்ப்புணர்வையும் தோற்றுவித்துவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(01,200)

# பொங்கு தமிழ் சுமுகமாக...

கின்றோம். நாம் எமது சொந்த இடத்திற்குச் செல்ல, இராணுவம் விலகிச் செல்லவேண்டும். இது எங்கள் மக்களின் அடிப்படை உரிமை. எனவே, அவர்களைச் சுதந்திரமாக இந்நிகழ்வில் பங்குகொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஐந்நூறு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு - அவர்கள் இந்நிகழ்வினை வழிநடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள் - இலகுவாக இனங்காண்பதற்கு ஏற்றவகையில் விசேட பட்டியை அணிந்திருப்பர். எனவே, பொலிஸார் பொங்கு தமிழுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையிராது என்றும் மனித நேய அமைப்புக்கள், கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளன.

இதன்போது, யாழ்.மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் ஒருபக்கச் சார்பாக செயற்படவில்லை. நீங்கள் உங்களது இடத்திற்கு செல்ல நினைப்பதும், மக்களை ஒன்றிணைப்பதும் உங்கள உரிமை. இந்நிகழ்வில் எவ்விதமான அசம்பாவிதங்களும் நடைபெறாமல் கவனித்துக்கொள்வது - எங்களது கடமை. ஏற்கனவே, இது தொடர்பாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் நாம் கலந்தாலோசித்துள்ளோம் என்றார்.

இக்கலந்துரையாடலில் - மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன், கியூடெக் அமைப்பின் பணிப்பாளர் அருட்தந்தை ஜெயக்குமார், வணிகர் சங்கத் தலைவர் ஜெயசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 29.06.2003 இற்கு முன் நேரில்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.